# சத்திய வேத

# பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. | 1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது | Telephone; No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER

"கர்த்தர் நகரத்தைக் கர்க்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

82-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1957-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 43-ம் இலக்கம்


## திரு. சி. எஸ். நாயகம்அவர்கள்

இளவாலை, பத்தாவத்தையைத் தமது ஜனனபதியாகக் கொண்டவரும், மலாயன்றெயில்வேயிலே கடந்த 37 ஆண்டுகளாக உத்தியோகம் வகித்திருந்து சென்றஜப்பசிமாதத்தில் தமதுபதவியிலிருந்து இளைப்பாறியவரும், நம்பத்திரிகைக்குக் காலந்தோறும் வேதவிஷயமாய் அருமையான பலகட்டுரைகள் உதவிவந்துள்ளவருமான திரு. சி. எஸ். நாயகம்அவர்கள் சென்ற செவ்வாய்க்கிழமை சேமமே தமதுஜனனபதிவந்து சேரலாயினரென அறிகின்றோம்.

## அரசாங்கத்தின் மொழிக்கொள்கை

இலங்கை றெயில்வே அடையாளச் சின்னத்திலுள்ள எழுத்துகளும், அரசாங்க கடிதங்கள்வைத்து அனுப்பப்படும் உறைகள்மீது பொறிக்கப்பட்டுள்ள "ஓ. எச். எம். எஸ். என்ற எழுத்துகளும் இனிமேல் சிங்களத்தில் இருந்துவரும். 1960-ம் ஆண்டுமுதல் தெலிபோன் இடாப்புச் சிங்களத்தில் மட்டுமே இருக்கும். பிரதமர் பண்டாரநாயகா சமீபத்தில் நடத்திய ஓர் மகாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய தீர்மானங்களில் இவைகளும் அடங்குவனவாகும். அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் சம்பந்தப்பட்ட உயர்தர அரசாங்க அதிகாரிகள் அம்மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். 1960-ம் ஆண்டுவரை தெலிபோன் இடாப்பை ஆங்கிலத்தில் தயாரிப்பதென்றும், அவ்வாண்டுமுதல் சிங்களத்தில்மாத்திரமே அதைத்தயாரிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. அரசாங்க கடிதங்கள்வைத்து அனுப்பப்படும் உறைகள்மீது கா[illegible]ப்படும் ஓ. எச். எம். எஸ். எனும்எழு[illegible]துகள் தற்போது ஆங்கிலம், தமிழ், சிங்களமாகிய மூன்று பாஷைகளிலும் இருந்துவருகின்றன. இனிமேல் சிங்களஎழுத்துகளில்மட்டுமே அச்சிடுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

## விசாகேட்கும் மனுக்கள்

இந்தியாசெல்வதற்கென்று இந்திய ஹைகம்மிஷனிடம் விசாகேட்டு மனுப்பண்ணும் இலங்கைப்பிரஜைகள் இந்தியாவுக்குப்பிரயாணமாக ஐந்துதினங்களுக்கு முன்னுகவேனும் மனுப்பண்ணவேண்டுமென்று இந்திய ஹைகம்மிஷன் அதிகாரிஒருவர் தெரிவித்திருக்கின்றார். ஹைகம்மிஷனிடம் விசாகேட்கச்சென்றால் அதிக காலதாமதம் ஏற்படுகிறதென்றும், அதனால் இலங்கையர்களுக்குப் பெருங்கஷ்டநஷ்டம் ஏற்படுகிறதென்றும் முறையீடுசெய்யப்படுவது சம்பந்தமாகவே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறாராம். விசாவழங்கு முன் இந்தியஅரசாங்க சட்டதிட்டங்களைப் பரிசீலனைசெய்து, அதன்மேல் நாலுஐந்து பேர்கள்வழியாகப் பாஸ்போட்டுகள்சென்று, கடைசியாகக்கையொப்பத்துக்குவர மூன்று நான்கு தினங்கள் [illegible]டிக்கின்றன. அதனால், திட்டமிட்டு இந்தியாவுக்குப் பிரயாணஞ்செய்கிறவர்கள் நாலுஐந்து தினங்களுக்குமுன் விசாவுக்கு மனுப்பண்ணுமாறு கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

# சுதேச வர்த்தமானம்

## லோறி – சைக்கிள் விபத்து

கிளிநொச்சியிலே ஓர் யந்திரக்கலப்பைச் சாரதியான கணபதிப்பிள்ளை குமாரசிங்கம் என்ப[illegible]ர் சென்ற செவ்வாய்க்கிழமை ஓர்சைக்கிளிலே வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் கிளிநொச்சிப் படமாளிகைக்குச் சமீபமாக லொறிஒன்றினால் மோதுண்டு விபத்துக்குள்ளாயினர். இவர் சாவகச்சேரி அரசினர்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கேமரணமாயினர். லொறிச்சாரதி கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

## மந்திரி பரவசமடைந்தார்

கொழும்பு-கல்லோயா விமானப் பிரயாண சேவையைச் சென்ற வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைத்த போக்குவரத்துமந்திரி மைத்திரிபாலா சேனநாயகா அதேவிமானத்தில் யாழ்ப்பாணத்துக்கும்வந்து இங்கே சிறிதுவேளை தங்கியபின் திரும்பலாயினர். பலாலி, விமானநிலையத்தில் திடீரென வந்திறங்கிய மந்திரி அங்கே தமக்கு அளிக்கப்பட்ட ஓர்வரவேற்பில் பேசியபோது: நான் யாழ்ப்பாணத்தில் சிறிதுநேரம் தங்கியிருந்தபோதிலும் இங்கு எனக்கு அளிக்கப்பட்ட மகத்தான அன்பு நிறைந்த வரவேற்பு உபசாரத்தைக் கண்டு நான் பரவசமடைந்தேன்; நான் விரைவிலே மீண்டும் யாழ்ப்பாணம் வந்து, இரண்டுமூன்றுதினங்கள் தங்கியிருந்து இ[illegible]குள்ள வேலைத்திட்டங்களைப் பார்வையிடுவேன்; எதிர்பாராத விதமாகப் பாதிக்கப்பட்ட எமதுநட்பு மீண்டும் புத்துயிர்பெறுமென நம்புகிறேன் எனக் கூறலாயினர்.

## கட்சியில் பிளவுஏற்படுமா ?

பிரதமர் பண்டாரநாயகாவைத் தலைவராகக்கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றாகத்திருத்தி அமைக்கவேண்டுமென்று அக்கட்சியைச்சேர்ந்த பெருந்தொகையான செல்வாக்குள்ள அங்கத்தவர்கள் ஆசிக்கின்றார்கள்; அதனால் இதுசம்பந்தமாக ஆலோசிக்கும்படியாய் இவ்வாரத்திலே ஓர்கூட்டம் நடத்தப்படுமென்று பிரதமஅரசாங்க கொறெடாவான திரு. ஜே. சி. முனசிங்காஎன்பவர் தெரிவித்திருக்கின்றார். பெருந்தொகையான செல்வாக்குள்ள அங்கத்தவர்கள் அக்கட்சியிலிருந்து விலகுவார்களென எதிர்பார்க்கப்படுவதாயும், அதனால் அக்கட்சியிலும், அரசாங்கத்திலும் நெருக்கடி தோன்றக்கூடுமென்றும் வேறுசிலஅங்கத்தவர்கள் கூறியிருக்கிறார்கள்.

## யுத்தஞாபகார்த்த தினம்

கடந்த இரண்டுமகாயுத்தங்களினதும் ஞாபகார்த்ததினத்தை இந்தக் கார்த்திகைமாதம் 10-ந்திகதி ஞாயிறன்று அனுட்டிப்பதென உள்நாட்டு விவகாரமந்திரி தீர்மானித்திருக்கின்றார், அன்றுபகல் 11 மணிக்கு வழமைபோல இரண்டுநிமிஷ மௌனம் அனுட்டிக்கப்படும். அன்று கோவில்களில் விசேஷபிரார்த்தனைகளும் நடத்தப்படும்.

## கட்டுநாயகா விமானதளம்

இம்மாதம் 1-ந் திகதி வெள்ளிக்கிழமைகாலை 9-50 மணிக்கு நடைபெற்ற ஓர்வைபவத்திலே கட்டுநாயகா விமானதளமும் பிரித்தானியரிடமிருந்து இலங்கை அரசாங்கத்தின் கைக்கு மாறியது. அப்போது பிரித்தானிய விமானப்படையின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தகொடி கீழே இறக்கப்பட்டு, அதனிடமாக இலங்கை விமானப்படையின் சின்னம் பொறிக்கப்பட்ட இலங்கைக்கொடி பறக்கவிடப்பட்டது. பிரித்தானியஆதிக்கத்தின்கீழ் கடந்த பதினைந்துவருடங்களாக இருந்துவந்த இந்த விமான நிலையம் 137 ஏக்கர் விஸ்தீரணமுடையதாகும்.

## மந்திரிகள்தொகை அதிகரிக்குமா ?

பதினன்கு மந்திரிகளைக்கொண்ட இலங்கை மந்திரிசபையிலே மற்றும் ஓர்மந்திரியை நியமித்து அவர்கள்தொகையைப் பதினைந்துபோாக்க அரசாங்கம் ஆலோசனைசெய்து வருகிறது. சென்ற செவ்வாய்க்கிழமைகாலை நடந்தேறிய அரசாங்ககட்சிக் கூட்டத்திலே இதுசம்பந்தமாக விவாதிக்கப்படலாயிற்று. திட்டக்காரியாலய [illegible]லைகளைத் துரிதப்படுத்துமாறு புதியபல விவசாய அபிவிருத்தித் திட்டங்கள்உட்பட ஏனையதிட்டங்களுக்கெல்லாம் பொறுப்பாளியாகவே புதியமந்திரி நியமிக்கப்படுவாரெனத் தெரியவருகிறது. அரசாங்ககட்சிப் பிரதமகொறெடாவான திரு. ஜே சி. முனெசிங்கியே புதியமந்திரியாவாரென்று சொல்லப்படுகிறது.

## தேசீயமய முதல்நடவடிக்கை

பஸ்களின் தேசியமய முதல்நடவடிக்கையாகப் பாணந்துறைப் பஸ்கம்பெனியின்நிர்வாகத்தைப் போக்குவரத்துச்சபை சென்ற 4-ந்திகதியன்று கையேற்றிருக்கிறது. அதனால் இந்தக்கம்பெனிக்குச்சொந்தமான 12 பஸ்களும், 40,000 ரூபாபெறுமதியான பஸ்பழுதுபார்க்கும் தொழிற்சாலையும் தற்போது போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமாகிவிட்டன. பஸ்தளபாடங்களெல்லாம் மிகநுணுக்கமாகப் பரிசீலனைசெய்து ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## தோட்டங்கள் தேசீயமயமாகுமா ?

இலங்கையிலே பிறநாட்டினர்கள் வசம் 552 தேயிலைத் தோட்டங்கள் இருந்துவருகின்றன. இவைகள்எல்லாமாக 2 லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ளன. இந்தத்தேயிலைத் தோட்டங்களை ஏக்கருக்குத் 925 ரூபா வீதம் விலைகொடுத்துத் தேசியமயமாக்க வேண்டுமென்றும், அதற்கு 24 கோடியே 5 லட்சம்ரூபாமாத்திரம் தேவைப்படுமென்றும் உணவு–விவசாய மந்திரி பிலிப்குணவர்த்தன அரசாங்கத்துக்கு ஆலோசனைகூறியிருக்கிறார். ஆனால், வர்த்தகமந்திரி ஆர். ஜி. சேனநாயகா, நிதிமந்திரி ஸ்ரான்லி டிசொய்சா, காணிமந்திரி சி. பி. டி சில்வா ஆகிய மூவரும் அவைகளைத் தேசியமயமாக்கும் யோசனையைக் கண்டித்திருக்கின்றனர். பிறநாட்டினர்வசமுள்ள தோட்டங்களைத் தேசியமயமாக்கினால் இலங்கைத்தேயிலைக்கு மார்க்கெற்கிடையாமல் போய்விடுமென்று வர்த்தகமந்திரியும், இச்சந்தர்ப்பத்திலே நாட்டின் பொருளாதாரநிலையைச் சீர்குலைக்க முடியாதென்று நிதிமந்திரியும் கூறியிருந்தும் உணவு-விவசாய மந்திரியோ இந்ததேசியமயத்திட்டத்தைக் கொண்டுவருவதென நிற்கின்றார்.

## விமானப்படை விமானங்கள்

இலங்கை விமானப்படை தற்போது பலவினமுமான 22 விமானங்களைக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. இவைகளைத்தவிர, முதல்தரமான ஹெலிகப்டர் விமானங்கள் இரண்டும் அதனிடமுள்ளன. இந்தவிமானங்கள் பிரயாணிகளை ஏற்றிச்செல்லவும், விமானப் பயிற்சி அளிக்கவும், விமான விளையாட்டுகளுக்கும் உபயோகிக்கப்பட்டுவருகின்றன.

## ஏயர் சிலோன் இழந்த விமானிகள்

"ஏயர் சிலோன்" விமானசேவையைக் கைவிட்டு அனுபவமிக்க விமானிகளும், எஞ்ஜினியர்களும் வெளியேறுகின்றார்கள். ஏற்கனவே மூன்றுவிமானிகளும், நான்குஎஞ்ஜினியர்களும் வெளியேறிச் சம்பளங்கூடிய நல்ல சேவைகளில் அமர்ந்துவிட்டார்கள். மற்றோர் சிரேஷ்டவிமானி இவ்வாரத்திலே வெளியேறுகின்றார். அதனால் தற்போது ஏயர்சிலோனில் இரு சிரேஷ்டவிமானிகளும், ஐந்துகனிஷ்ட விமானிகளும், மூன்று எஞ்ஜினியர்களும் எஞ்சியிருப்பார்கள். வெளியேறியவர்கள் இதுவரைபெற்றுவந்த சம்பளத்தைப்போல் இருமடங்குசம்பளத்தில் பிரித்தானிய, அமெரிக்க, இந்திய விமானஸ்தாபனங்களில் சேர்ந்துள்ளார்கள்.

## காலித்துறைமுக தேயிலைஏற்றுமதி

கொழும்புத் துறைமுகத்தைக்காட்டிலும் காலித்துறைமுகத்திலே கப்பல்களில் ஏற்றுமதி, இறக்குமதிவேலைகள் எண்மடங்குதுரிதமாய் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்புத்துறைமுகத்திலே ஒருவாரத்தில் நான்குலட்சம்றாத்தல் தேயிலை ஏற்றுமதிசெய்ய ஆறுநாட்கள்பிடித்திருக்க, அதேவாரத்தில் காலித்துறைமுகத்திலே ஆறுலட்சம் றாத்தல்தேயிலை இரண்டரைநாட்களில் ஏற்றுமதி செய்யப்பட்டதாய்க் கல்விமந்திரி அறிவித்திருக்கின்றார். இனிமேல் எகிப்துக்கு அனுப்பப்படும் தேயிலைமுழுவதையும் காலித்துறைமுகம்மூலமாகவே ஏற்றுமதிசெய்ய வர்த்தகமந்திரி முடிவுசெய்துள்ளனர்.

## கனடாவின் இலங்கை ஹைகம்மிஷனர்

சேர் வேலுப்பிள்ளை குமாரசாமி அவர்கள் கனடாவிலே இலங்கையின் ஹைகம்மிஷனராக நியமனஞ்செய்யப்படலாமெனத்தெரிகிறது. இவர் கடைசியாகப் பர்மாவிலே இலங்கைத்தூதுவராகப் பதவிவகித்திருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பத்திரிசியார் கல்லூரி — யாழ்ப்பாணம்

### உபகாரச்சம்பள விபரம்

நிகழும் கார்த்திகைமாதம் 23-ந் திகதி நடைபெறவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் விசேஷசித்தியடையும் ஆறுமாணவர்களுக்கு விடுதிச்சாலையில் 3 முழு உபகாரச் சம்பளமும், 3 அரை உபகாரச் சம்பளமும் கொடுபட விருக்கின்றன. இச்சலுகை ஒருவருடத்துக்கு நீடிக்கும். ஆனல், கல்வியில் ஊக்கம், நன்னடத்தை முதலியவைகளைப் பொறுத்து இச்சலுகைகளை அடுத்தவருடத் தொடக்கத்தில் புதுப்பிக்கலாம்.

கீழ்க் காட்டப்படும் வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கே உபகாரச் சம்பளம் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| J. S. C. வகுப்பில் | 1–1–45–க்குப்பின் பிறந்தோர் | 13 + |
| 3–ம் பார ,, | 1–1–46–க்குப்பின் பிறந்தோர் | 12 + |
| 2–ம் பார ,, | 1–1–47–க்குப்பின் பிறந்தோர் | 11 + |
| 1–ம் பார ,, | 1–1–48–க்குப்பின் பிறந்தோர் | 10 + |
| 5–ம் வகுப்பில் | 1–1–49–க்குப்பின் பிறந்தோர் | 9 + |
| 4–ம் வகுப்பில் | 1–1–50–க்குப்பின் பிறந்தோர் | 8 + |

விண்ணப்பப் பத்திரங்களைக் கல்லூரிக் கந்தோரில் பெற்று, அந்த அந்த மாணவனின் கட்டளைக் குரவருடைய பாராட்டுக் கையொப்பத்துடன் கார்த்திகைமாதம் 16-ந் திகதிக்குமுன் நமது கந்தோருக்கு அனுப்பவேண்டும். ஏற்கனவே சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்ந்திருக்கும் மாணவர்கள் இச்சலுகைகளில் பங்குபற்ற முடியாது.

தலைவர்.

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA.

### SCHOLARSHIPS

6 Scholarships in the College Hostel — 3 half and 3 full—tenable for one year and subject to renewal, will be awarded on the results of the Entrance Test to be held on 23-11-57.

The following age groups are eligible:

| | | |
|---|---|---|
| J. S. C. | 13 plus—those born on or after | 1-1-1945 |
| 3rd Form | 12 plus— ,, ,, | 1-1-1946 |
| 2nd Form | 11 plus— ,, ,, | 1-1-1947 |
| 1st Form | 10 plus— ,, ,, | 1-1-1948 |
| 5th Std. | 9 plus— ,, ,, | 1-1-1949 |
| 4th Std. | 8 plus— ,, ,, | 1-1-1950 |

All applications marked "SCHOLARSHIP" (Forms can be obtained at the College Office) and recommended by the Parish Priest, must reach the office before 16th November.

Boys who are already at St. Patrick's are not eligible for these scholarships.

RECTOR.

## பேசாலைத் தபால்

பேசாலை, பாத்திமா ஆண்பாடசாலைப் பாராளுமன்றத்தின் இரண்டாவது பொதுத்தேர்தல் சென்ற 31-ம், 1-ம் தேதிகளில் நடைபெறலாயிற்று. இப்பாடசாலைப் பாராளுமன்றம் முப்பிரிவானது. ஆசிரியர்களையே அங்கத்தவர்களாகக்கொண்ட செனற்சபை, ஆறும்வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களுடன் கூடிய சிரேஷ்டமாணவர் மன்றம், மற்றையமாணவர்களைக்கொண்ட கனிஷ்டமாணவர்மன்றம் என்பனவே இந்தமுப்பிரிவுமாகும். ஆசிரியர்களின் மேற்பார்வையில் சிரேஷ்டமாணவர் மன்றமே பாடசாலை நிர்வாகவேலைகளைக் கவனித்துவருகின்றது. சிரேஷ்டமாணவர் மன்றத்தினர் இரகசிய வாக்கெடுப்புமூலம் பிரதமரையும், சபாநாயகரையும் தெரிவுசெய்வர். பின்னர்பிரதமர் கல்வி, சமய, நிதிஉணவு, விளையாட்டு, விவசாய, சுகாதார மந்திரிகளை நியமித்து நிர்வாகவேலைகளைக் கவனிப்பர். கனிஷ்டமாணவர்மன்றம் இவ்வேலைகளில் உதவியாயிருக்கும்.

சென்ற 31–ந்தேதி வியாழக்கிழமை காலை செனற்சபைத்தலைவர் திரு. சிங்கராயர் மாணவர்மன்றங்களைக் கலைத்து அடுத்த பொதுத்தேர்தலுக்கான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அன்று மாலை சிரேஷ்டமாணவர்மன்ற மேற்பார்வையாளர் திரு. சாமுவேல் பெனடிக்ற் அபேட்சகர்களிடமிருந்து நியமனப்பத்திரங்களைப்பெற்றுத் தேர்தல் சின்னங்களை அளித்தார். வீடு, திறப்பு, நட்சத்திரம், குடைஎன்பன சின்னங்களாக அளிக்கப்பட்டன.

1-ந் தேதி வெள்ளிக்கிழமை பொதுத்தேர்தலின் இரண்டாம் தினமாகும். தேர்தல் நடைமுறைபற்றிய ஒழுங்குகளைத் தலைமையாசிரியர் திரு. சிங்கராயர் எடுத்துக்கூறியபின் தேர்தலுக்குத் தலைமைவகித்த வண. எஸ். கருணாகரர் சுவாமியவர்கள் சபாநாயகர், பிரதமர் பதவிகளின் கடமைகளை எடுத்துக்கூறி மாணவர்கள் சொந்த விருப்புவெறுப்பின்றி நிர்வாகத்திறமையுள்ளவர்களையே தெரிவுசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். பின்னர் தேர்தல் ஆரம்பமாகியது. மாணவர்கள் உற்சாகத்துடன் வாக்களிக்குமிடங்களுக்குச்சென்று வாக்காளர் இடாப்பின்பிரகாரம் பெயர்களைப்பதிந்து, தேர்தல்சின்னங்களுடன் அச்சடிக்கப்பட்டிருந்த வாக்குச்சீட்டுகளைப் பெற்றுத் தாம்விரும்பிய அபேட்சகரின் பெயருக்கெதிரே அடையாளமிட்டு அவற்றை மடித்து, வாக்குப் பெட்டியினுள் இட்டனர். திரு. மரியதாசன், திரு. செபமாலை ஆகியோர் தேர்தல்அதிகாரிகளாகக் கடமையாற்றினர்.

செல்வன் தேவதாசன் தாம் 14 அதிகப்படியான வாக்குகளினல் சபாநாயகர் பதவிக்கும், செல்வன் சிங்கராயர் டலிமா 6 அதிகப்படியான வாக்குகளினல் பிரதமர் பதவிக்கும் தெரியப்பட்டதாகச் சுவாமியவர்கள் அறிவித்தார். பிரதமர்பதவிக்குப் போட்டியிட்டுத் தோல்வியுற்ற செல்வன் அலோசியஸ் தாம் எதிர்க்கட்சித்தலைவராக நியமனம்செய்யப்பட்டபின் தேர்தல் இனிதே முடிவுற்றது.

— நிருபர்

## அர்ச். சவேரியார் கல்லூரி

### மன்னர்

கிறிஸ்தியன் பிறதர்மார் மாதாந்தம் நடத்தும் பாலகயேசுவின் நவநாளை அவர்களால் நடாத்தப்படும் ஒவ்வொரு கல்லூரியும் பக்தியுடன் அனுசரிப்பது வழக்கம். அத்துடன் ஒருகல்லூரி மாணவர்கள்என்கிலும் முகத்துவாரம், அர்ச். சூசையப்பர் சிரேஷ்டசந்நியாச பயிற்சிமடத்தின்முன் எழுந்தருளியிருக்கும் பாலகயேசுவின் பெட்டகக் கோவிலைத் தரிசிக்கக் கடமைப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். கடந்த ஐப்பசிமாதம் கல்லூரிமாணவர்கள் ஒவ்வொருவரும் பரித்தியாகமும், நற்கிரிகைகளுஞ்செய்து எமதுகல்லூரிக்காக ஒப்புக் கொடுத்தார்கள். அம்மாதந்தான் எ[illegible]கல்லூரிமாணவர்கள் பாலகயேசுவின் பெட்டகக்கோயிலைத் தரிசிக்கவேண்டியதாயும் இருந்தது.

நவநாளின் கடைசித்தினமான 25-ந் திகதி வெள்ளிக்கிழமை சங். பிறதர் பேனர்டின், சங். பிறதர் யோசெவ், ஆசிரியர் திரு. வில்லியம் என்பவர்கள் தலைமையில் கொழும்புமாநகருக்குப் பயணமானேம். அடுத்தநாள்காலை 7 மணியளவில் அர்ச். சூசையப்பர் சந்நியாச பயிற்சிமடத்தை அடைந்தோம். பின்னர் அந்தமடத்தின்கண் எழுந்தருளியிருக்கும் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் எமக்கென்று விசேஷபூசைப்பலி நிறைவேறியது.

அன்றுமாலை சற்பிரசாதஆராதனை முடிவடைந்ததும் யாத்திரிகர்கள் எல்லோரும் சுற்றுப்பிரகாரமாகப் பாக்கள்பாடிக்கொண்டும், செபமாலைஓதிக்கொண்டும் திவ்வியபாலகயேசு எழுந்தருளியிருக்கும் பெட்டகக்கோயிலுக்குச் சென்றேம். அங்கு அர்ச். சூசையப்பர்மடத்தின் அதிபர் சங். பிறதர் சேவியர் பக்தியாய்ச்சீவித்துப் புத்தியாய்நடந்து புஷ்டியாயிருக்கவேண்டுமென்ற பொருள்படும் ஓர்சிற்றுரை நிகழ்த்தினர். அதன்பின் எமதுகல்லூரியின்சார்பில் சங். பிறதர் பேனர்டின் செபச்செண்டைத் திவ்வியபாலகயேசுவின் திருப்பாதங்களில்வைத்து ஒப்புக்கொடுத்தார். பின்னர் சிறுவர்கள் பாலகயேசுவுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்குஞ்செபஞ்சொல்லிப் பாலகயேசுவின்பேரில் ஓர்பாட்டுப்பாடினர்கள்.

அடுத்தநாள் கிறீஸ்துராசா திருநாளன்று சிற்றாலயத்தில் திவ்வியபூசை கண்டபின் அதிமேற்றிராசன ஆசனக் கோயிலையும், கொழும்புமாநகரையும் சுற்றிப்பார்த்துவிட்டுச் செவ்வாய்க்கிழமை காலை மன்னரை அடைந்தோம்.

— பிறிஜெட் கூஞ்ஞ

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### யாழ்ப்பாணம் மாநகரசபை

### சந்தைகளின் குத்தகை – 1957

மேற்படி சந்தைகளுக்கான கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் நாள், 1957ஆம் ஆண்டு நவம்பர்மாதம் 11ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிவரை இத்தால் நீடிக்கப்படுகின்றது.

ஹட்சன் செல்வராஜா,
மாநகரசபை கொமிஷனருக்காக

மாநகரசபை அலுவலகம், —இ—
யாழ்ப்பாணம்,
1-11-57

## பெற்றோர் பெருந்தினவிழா

செட்டிகுள விசாரணைப்பங்கைச் சேர்ந்த நொச்சிக்குளம், கத்தோலிக்க தமிழ்க் கனிஷ்டபாடசாலையிலே சென்ற 30-10-57 புதன்வாரம் கட்டளைக் குரவர் வண. ஏ. மூஜே சுவாமியவர்கள் தலைமையில் பெற்றோர் தினவிழா ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. அதற்குமுன் 28-10-57 திங்கள்வாரம் சாயந்தரம் இல்லவிளையாட்டுப்போட்டிகள் "எமிலியானுஸ்" விளையாட்டு மைதானத்தில் நடைபெறலாயிற்று. பெரியார்களும், பொதுமக்களும், பெற்றோரும் பெருந்திரளாக விளையாட்டுப் போட்டிகளைப்பார்த்துப் பெரிதும்இன்புற்றனர். பிலிப் பொன்னையா இல்லம், மதுரநாயகம் இல்லம் என்னும் இரு கோஷ்டிமாணவர்களும் இருபந்தர்களில் அமர்ந்து போட்டிகளிற் கலந்துகொண்டனர். 30–10–57 புதன்வாரம் பெற்றோர்தினவிழா ஆரம்பமாகியது.

விழாவிற்கு ஆயத்தமாகக் காலை 7மணிக்கு ஆசிரியரும், பெற்றோரும், பிள்ளைகளும் ஒன்றுகூடினர். 7–30 மணிக்கு வண. கட்டளைக்குரவரால் பாடற்பூசை நிறைவேறியதும், பாடசாலைக்கொடி ஏற்றிவைக்கப்பட்டது. பிற்பகல் 5 மணியளவில் பாடசாலைக்கிராமத்தைச்சேர்ந்த பெற்றோருக்கிடையில் கயிறிழுவைப்போட்டி நடைபெற்றது. மாலை 6 மணிக்குப் பெருந்திரளானேர் சமுகந்தந்து விழாவைச்சிறப்பித்தார்கள். வண. கட்டளைக்குரவர் விழாவிற்குத் தலைமைதாங்கினர். வவுனியா வட்டார வித்தியாதரிசி எஸ். இராமலிங்கம் அவர்கள் பக்கத்தில் அமர்ந்திருந்தார். பாடசாலைக்கீதம் [illegible] பாடசாலைத்தலைமை ஆசிரியர் [illegible]சேவ் எஸ்பீரியர் அவர்களால் பாடசாலையின் வருடாந்தஅறிக்கை வாசிக்கப்பட்டது. வித்தியாதரிசி அவர்கள் விளையாட்டுப்போட்டியிலும், கல்வி, ஒழுக்கம், வாவு ஆகியவற்றிலும் முதன்மைபெற்ற மாணவர் மாணவிகளுக்குப் பரிசில்கள் வழங்கினர். பிலிப் பொன்னையா இல்லம் 100புள்ளிகளும், மதுரநாயகம்இல்லம் 83 புள்ளிகளும் பெற்றமையால் வெற்றிபெற்ற பிலிப் பொன்னையா இல்லத்திற்கு வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

தலைவர்சுவாமியார்அவர்கள் கல்வியின்நோக்கத்தையும், மாணவர்கள் பாடசாலைக்குக் கிரமமாக வரவேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டி, நாட்டின்முன்னேற்றம் பாடசாலைகளிலேயே தங்கியிருக்கிறதென்றும், பெற்றோர் பாடசாலைஆசிரியர்களுடன் ஒத்துழைப்பதால் மாணவர்கள்பெரும் நன்மைகள் அடைவார்களென்றும் கூறிநின்றார். அதன்மேல் வித்தியாதரிசிஅவர்கள் "வன்னிப்பகுதியின் கல்விநிலை" என்பதுபற்றிப் பேசியபோது, நொச்சிக்குளக் கனிஷ்டபாடசாலை வவுனியாப்பகுதியில் தற்போது சிறப்புற்றுத்திகழ்கிறதென்றும், அதற்குக் காரணம் தலைமைஆசிரியரின் ஊக்கமும், உதவிஆசிரியர்களின் ஒத்துழைப்பும், பொதுநலசேவையில் அன்னார் காண்பித்துவரும் ஆர்வமுமேயென்றும்கூறினர். பின்னர் முதலியாகுளம் கத்தோலிக்கபாடசாலைத் தலைமைஆசிரியர் பி. அந்தோனிப்பிள்ளை அவர்கள் "பெற்றோர் கடன்" என்னும் விஷயம் பற்றிச் சிறப்பாகப்பேசினர். தொடர்ந்து தமிழ், ஆங்கிலம்ஆகிய இரு பாஷைகளிலும் மாணவர், மாணவிகளின் நடனம், நடித்தல், நாடகம்சிறப்பாகநடைபெற்று, ஈற்றில் தலைமைஆசிரியர்கூறிய நன்றியுரையுடன் விழா முடிவெய்தியது.

— வன்னித்தூதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### சிறியபுஷ்பமும் ருஷியமக்களும்

''ஓர்ஆத்துமாவின் சரித்திரம்'' என்ற நாமத்துடன் குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள் தனதுகரத்தால்எழுதிய சுயசரிதையை ருஷியபாஷையில் மொழிபெயர்த்து, இரும்புத்திரைக்கூடாக ருஷியாவுக்குள் மறைவாகப் புகுத்தக்கூடியதாய் நிதிசேகரிக்குமாறு பிரித்தானியதேச கத்தோலிக்கபத்திரிகைகள் 1955-ம்ஆண்டு விண்ணப்பஞ் செய்யத் தொடங்கின. பிரான்ஸ் தேசத்திலுள்ள ருஷியகுருமாரால் அது மொழிபெயர்க்கப்பட்டு, இலவசமாக வழங்கப்படவிருந்த பிரதிகள்ஒவ்வொன்றும் அச்சிடப்படுவதற்கும், பரப்புவதற்குமாகப் பத்துச்சிலின்வரையிலே செலவுபிடிக்குமென மதிப்பிடப்படலாயிற்று. முதலில் 3,000 பிரதிகளுக்குமேல் அச்சேற்றப்படவில்லை. ஆனால், இன்று 20,000 பிரதிகளுக்குமேல் இரும்புத்திரையின் இருபுறங்களிலுமாக, பிரிவினைச்சபையினரும், நாஸ்திகர்களுமான ருஷியமக்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளனஎன்று ''லிஸியேயின் அர்ச்சியசிட்டவள்''என்ற வெளியீடு தெரிவிக்கின்றது. இந்தத்திட்டம் பரிசுத்தபிதாவின் அங்கீகாரத்தைப்பெற்றுக் கருதினல்மார் திருச்சங்க தலைவரான கருதினல் திசரான்ஆண்டவரது தலைமையிலே ஆரம்பிக்கப்படலாயிற்று. அர்ச்.தெரேசம்மாள் ருஷியாவின் பாதுகாவலாளியாவள். இன்று அவள் ருஷியாவின் மகாப்பிரஸ்தாபம்பெற்ற அர்ச்சியசிட்டவளாகவிளங்குகின்றாள். இதனைஅறிந்துகொண்ட ருஷியாவின் நாஸ்திகர்மத்தியசங்கம் அவளுக்குள்ள மதிப்பைக்குறைத்துவிடத் தன்னாலானதெல்லாம் செய்துவருகின்றது.

### பிரிவினைச்சபை மடாதிபர்

மஸ்கோநகரிலுள்ள ருஷியபிரிவினைச்சபைப் பத்திறியாக்குவின் சொந்தப்பிரதிநிதியாய் இத்தாலியிலே இருந்துவந்தவரான செர்ஜியஸ் கனுபீவ்மடாதிபர் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கின்றார். அநேகவருடகால சமய ஆராய்ச்சியின்பின்னரே அவர் ஓர்கத்தோலிக்கராகத் தீர்மானித்தார். தமதுபுதல்வரான அலெக்சான்டருன் வசித்திருந்த இவர் போர்டினன்எனும் இடத்திலே திருச்சபையில் சேர்ந்துகொண்டார். ருஷியாவிலே சமாராஎனுமிடத்தில்பிறந்தஇவர் சென்பீற்றேர்ஸ்பேர்க்நகரிலுள்ள இராணுவகலாசாலையில் கல்விபயின்று முதலாவதுஉலகயுத்தத்திலே கருங்கடற்பகுதியில் ஓர் பட்டாளதலைவராகச்சேவைசெய்தார். தமதுமனைவியார் காலஞ்சென்றபின் இவர் ஓர்துறவியாகி 34-ம்வயதிலே ஓர்மடாதிபராக நியமனஞ்செய்யப்பெற்றார். 1949-ம்ஆண்டு மஸ்கோநகர பத்திறியாக்குவின் விக்காராகச் சோபியாநகர் சென்றார். பிந்தஅவரின்பிரதிநிதியாக இத்தாலிக்கு அனுப்பப்பெற்று, சுயநாட்டைவிட்டு வெளியேறிய ருஷியர்களையும், ருஷியபிரிவினைச்சபைக் கிறீஸ்துவர்களையும் விசாரணை செய்துவந்தார்.

### உயிர்தப்பிய கருதினல்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள யூகோசிலேவியாவின் திருச்சபை மேலதிகாரியும், சாகிறெப்நகரின் அதிமேற்றிராணியாருமான (தற்போதுகருதினல்) ஸ்ரிபினக் ஆண்டவரைக்கொன்றுவிடுமாறு அப்போது யுத்தம்முடிவடைந்தும் குரூரட்ரியமாகாண கம்யூனிஸ்தர்கள் சூழ்ச்சிசெய்தார்கள். பொட்சூட்செட் எனுமிடத்துக்குச் சமீபமாக அவருடையகார் செல்லும்போது பதிவிருந்து தாக்கி அவரைக்கொன்றுவிடச் சதித்திட்டஞ்செய்து காத்திருந்தார்கள். ஆனால், அவர்களின் சூழ்ச்சி பலிக்கவில்லை. எவ்வாறெனில், இந்தச்சதிகாரர் கருதினல்ஆண்டவரின் கார்வருமென எதிர்பார்த்ததற்கு அரைமணி நேரத்தின்முன்னரே — அதாவது அவர்கள் சமீபமாகவுள்ள ஓர் தவறணையில்நிற்கும்போதே அது சொல்லப்பட்டஇடத்தைக் கடந்துசென்றுவிட்டது. இந்தச்சதிமானச் செயல்பற்றியசம்பவம் ஆஸ்திரிய வீயென்னாநகரில் பிரசுரமாகும் ''டியேபேர்ச்சி'' என்ற கத்தோலிக்க வாரவெளியீட்டில் இப்போதே பிரசித்தமாகியிருக்கிறது. கருதினல்ஆண்டவரின் உயிரைப்போக்க நடைபெற்ற முயற்சிக்குமுன் அவரும், குருமாரும் குரூரட்ரியமாகாணத்திலே பரிசுத்தஸ்தானத்திலிருந்தும் வேறாகப்பிரிந்த ஓர் ''தேசிய'' கிறீஸ்துவசபையை ஏற்படுத்தக் கம்யூனிஸ்தர்கள் முயன்றதைத் திடசங்கல்பத்துடன் எதிர்த்துநின்றார்கள். சதிமானம் பலியாதுபோகவே கருதினல்ஆண்டவரை ஓர்பாசிஸ்தரென்றும், யூதர்களையும், சேர்விய சாதியினரையும் நாஸிகள்துன்புறுத்தியவரை ஆதரித்துநின்றாரென்றும் அவர்மேல் குற்றஞ்சுமத்தி அவரைஅபராதியாக்க முனைந்தார்கள். பிந்தஅவர் ரிற்றோவால் சிறைவைக்கப்பெற்றார். தற்போது அவர் கிருசிக்என்ற தமதுசுயகிராமத்திலே கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறார். அவர் 1953-ம்ஆண்டு தைமாதம் ஓர்கருதினலாக்கப்பெற்றார்.

### ''பாப்பரசின் தொழிற்சாலை''

இங்கிலாந்திலே டேர்பிநகரிலுள்ள ஸ்பாலேன்மில்களின் முதலாளியாயிருந்து அவைகளை நடத்திவருகிறவர் திரு. அலன் ரேணர்அவர்கள். முன்னர் புரொட்டஸ்தாந்தராயிருந்து மனந்திரும்பிய ஓர்கத்தோலிக்கரான இவருடையதொழிற்சாலை பலதடவைகளிலும் ''பாப்பரசின் தொழிற்சாலை'' எனும் சிறப்புப்பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது. அதற்குக்காரணம் இவர் பாப்புமாரின் சாதாரணநிருபங்களில் அடங்கியுள்ளவிதிகளை மேற்கொண்டு அதனைநடைமுறையில் உருப்படுத்தியிருப்பதும், தமதுதொழிற்சாலைச்சபையிலே தொழிலாளர்களைத் தலைவர்களாகக் கொண்டிருப்பதுமேயாகும். இவர் தொழிற்சாலைத் திருநாள் ஒன்றை வருடந்தோறும் கொண்டாடிவருகின்றார். அதன் ஞானவிசாரணைத்தலைவராய் ஓர்குருவானவர் இருந்துவருகிறார். இவர் தொழிற்சாலைத்திருநாளன்று நெசவுதொழிற்சாலையில் திவ்விய பூசை நிறைவேற்றுகின்றார். திரு. ரேணர்அவர்களின் தொழிலாளர்களில் மூன்றில்ஒருபங்குபேரே கத்தோலிக்கர். ஆனால், 50 பேருக்குமேல் தினமும் தொழிற்சாலைச் சிற்றாலயஞ்சென்று செபஞ்செய்து வருகின்றனர்.

### 66-வது கத்தோலிக்ககல்லூரி

அமிதபாத்நகரிலே சென்றமாதம் திறந்துவைக்கப்பெற்ற அர்ச். பிரான்சீஸ்சவேரியார் யேசுசபைக்கல்லூரியானது இந்தியாவின் 66-வதுகத்தோலிக்க கல்லூரியாகும். இந்திய வர்த்தக-கைத்தொழில் மந்திரியான திரு. மொறார்ஜி தேசாய்அவர்கள் கல்லூரித்திறப்புவிழாவின்போது பேச்சுநிகழ்த்தி யேசுசபையாரின் சிறந்தகல்விநோக்கங்களைப் புகழ்ந்துபாராட்டினார். இந்தியாவிலுள்ள கத்தோலிக்க கல்லூரிகளில் மொத்தமாகக் கல்விபயின்றுவருகின்ற 32,000 மாணவர்களிலே 8,000பேர்மாத்திரம் கத்தோலிக்கர். 4,500பேர் புரொட்டஸ்தாந்த கிறீஸ்துவர்கள். ஏனையோரெல்லாம் இந்துக்களும், முஸ்லீம்களுமே.

### போலாந்தில் மறுதிருப்பம்

போலாந்திலே கோமுல்காஎன்பவரைப் பிரதமராகக்கொண்ட கம்யூனிஸ்தஅரசாங்கம் சிலகாலம் அமர்ந்திருந்தபின் மீளவும் வேதவிரோதநாடகத்தில் இறங்கியிருக்கின்றது. அந்நாட்டிலுள்ள கலாசாலைகளிலே சந்நியாசசபைகளைச்சேர்ந்த குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரோ, அன்றேல் அவர்களால்நடத்தப்படும் கலாசாலைகளிலிருந்து பட்டதாரிகளானவர்களோ சமயபாடம் படிப்பிப்பதைத் தடுக்கும் ஓர் புதியநடவடிக்கையை அதுஎடுத்திருக்கிறது. இந்தத்தடையானது சமயபாட ஆசிரியர்களின்தொகை வெகுவாகக் குறைத்துவிடும். தற்போதைய கலாசாலைவருடத்தின் ஆரம்பத்திலே கல்விமந்திரிகாரியாலயம் கத்தோலிக்க—கத்தோலிக்கமல்லாத வேதசாஸ்திரகலாசாலைகளின் இடாப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. இந்தக்கலாசாலைகளின் பட்டதாரிகளே கலாசாலைகளில் சமயபாடம்படிப்பிக்கத் தகுதியுடையவர்களெனக் கருதப்படுவார்களென்றும் அதுதெரிவித்தது. அந்தஇடாப்பிலே சந்நியாச, கன்னிகாசபைகளும், அவர்களுடையகலாசாலைகளின் பட்டதாரிகளும், குருமடங்களும் அடங்கவில்லை. இந்நடவடிக்கையானது கம்யூனிஸ்தஆட்சியாலே உத்தரவாதஞ்செய்யப் பெற்றிருந்த ஓர்உரிமையை—அதாவது கலாசாலைகளிலேசமயகல்வியூட்டுவதாகிய திருச்சபைக்குள்ள பூரணஉரிமையைச் செயலளவிலே பாதிப்பதாயிருக்கின்றது. கோமுல்காவின் அரசாங்கம் திருச்சபையின் சுதந்திரவாழ்க்கையைக் கட்டுப்படுத்தியும், விசேஷமாய்ச் சமயசுற்றுப்பிரகாரங்களை விலக்கியும், பிறநடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகிறது. மேற்றிராணிமார் மனுப்பண்ணியபோதிலும் சுற்றுப்பிரகாரங்கள்நடத்துவதற்குப் பொதுவாக அனுமதிகள் மறுக்கப்படுகின்றன.

### லூர்துபதிக் காட்சிபற்றியகடிதம்

இற்றைக்கு நூறுவருடங்களின் முன் லூர்துபதியின் பங்குக்குருவராயிருந்த வண. பெறமல் சுவாமியார் அப்போது அப்பதியிலே மாதாவின்காட்சிபெற்ற பெர்னதெத்அம்மாள்மட்டிலே சந்தேகமும், கடுமையுமான மனப்பான்மையுடையவராய் இருந்துவந்தாரெனப் பாரம்பரியமாகக் கருதப்பட்டுவந்ததெல்லாம் முற்றும்அநியாயமென்பதை முன்னர்காணாமற்போயிருந்து சமீபத்திலே கண்டெடுக்கப்பட்ட கடிதம்ஒன்று தெளிவாக்கியிருக்கின்றது. லூர்துபதியில் முதற்காட்சிஅருளப்பட்டு ஒருமாதத்துள் வண. பெறமல்சுவாமியார் தமதுசகோதரருக்குஎழுதியிருந்த கடிதமானது காட்சிகளினதும், அற்புதஆரோக்கியங்களினதும் விபரங்களைத்தருகின்றது. அத்துடன்அவர் பெர்னதெத்அம்மாளுடன் கண்டிப்பாயிருந்தபோதிலும் அவளுடையநேர்மையைக் கண்டு ஆழ்ந்தமனவருட்சிகொண்டதாகவும், அவள்பெற்றகாட்சிகளில் அவர் நம்பிக்கைகொண்டதாகவும் தெரிவிக்கின்றது. சுவாமியார் காட்சிகளிலே நம்பிக்கைவைக்க மறுத்தாரென்றும், பெர்னதெத்அம்மாள்மட்டில் இரக்கமின்றிக் கடுமையாகநடந்துகொண்டாரென்றும் கூறப்படும்சம்பவத்தைஅதுகண்டித்து மறுக்கின்றது. பெறமால்குடும்பத்தின் சாசனசாலையிலிருந்து முன்னர்காணாமற்போன இந்தக் கடிதம் லூர்துதிருப்பதியின் முதன்மைவாய்ந்த சரிதாசிரியரானகாலஞ்சென்ற ஹென்றிலாசெர்அவர்களின் எழுத்துப்பத்திரங்களிடையே சமீபத்தில் கண்டெடுக்கப்படலாயிற்று. இது வருகிறமார்கழிமாதம் பிரசுரஞ்செய்யப்படவிருக்கும் வண. லோறென்ரது லூர்துபதி நூற்றாண்டுவிழாபற்றிய நூலில் வெளிவரவிருக்கின்றது.

### தாய்லாந்தும் கத்தோலிக்கரும்

இன்றுதாய்லாந்தென அறியப்படுகின்ற சீயநாட்டிலே பாப்பரசர் ஓர்அப்போஸ்தலிக்க ஸ்தானாபத்தியத்தை ஏற்படுத்தியிருக்கின்றார். அந்நாடுமுன்னர் இந்தோ-சீனஸ்தானாபத்தியத்தின்கீழ் இருந்துவரலாயிற்று. அங்கு புத்தசமயம்அரசாங்கசமயமாய்இருந்தபோதிலும் பிரஜைகளுக்கு மனச்சாட்சிச்சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. அந்நாட்டின் 1கோடியே 80 லட்சம்குடிசனங்களில் சுமார் 50,000பேரே கத்தோலிக்கர். இவர்களைப் பரீஸ்நகர் வெளிநாட்டுமிஷனரியசபையாரும், சலேசியன்சபையாரும் சிறுதொகையினரான மேற்றிராசனகுருமாருடன் விசாரணை செய்துவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கார்த்திகை மாதம்

**உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம்**

**பொதுக்கருத்து:** மக்கள் அடிக்கடி மரணத்தைப்பற்றிச் சிந்தித்துத் தங்களை நன்மரணத்துக்கு ஆயத்தப் படுத்திக்கொள்ளும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** பிலிப்பைன் தீவிலுள்ள இளைஞரிடையே வேதபோதகஅழைத்தல் அதிகரிக்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத

# பாதுகாவலன்

1957-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 7-ந் திகதி

## தனிச்சிங்கள நடவடிக்கை

"எது எப்படியிருந்தாலும் சிங்களவரும், தமிழரும் கடந்த 2,500 வருடங்களாகவே இந்நாட்டில் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ்ந்துவந்திருக்கிறார்கள். இந்நிலையிலே நாட்டின்சில விவரும் மொழிப்பிரச்சினைபற்றிய பிடிவாதங்காரணமாகத் தற்போதுமக்களிடையே பிளவு காணப்படுகிறது. சிங்களவர் தங்கள்மொழியிலும், கலாசாரத்திலும் பெருமைகொள்வது போலவே தமிழரும் தங்கள் மொழியிலும், கலாசாரத்திலும் பெருமைப்படுகின்றனர். இவ்விருசாகியத்தினரும் இலங்கை என்னும் ஒருதாய்வயிற்று மக்கள்என்பதையும், இருபாலாரும் தாராளமனப்பான்மையோடு விட்டுக்கொடுத்து நடந்து ஒருவரையொருவர்நேசித்து ஒற்றுமையாகவாழ்ந்து யாவரும் இலங்கையரென்ற ஒரேசமுதாயத்தை ஏற்படுத்த முயலவேண்டுமென்பதை மறந்துவிடக்கூடாது. இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சமூகத்தைச்சேர்ந்த அரசியல்வாதிகள் தனிச்சிங்களசட்டத்தை இயற்றியதன்மூலம் இந்நாட்டிலுள்ள தமிழர்—சிங்களரிடையே பிளவைஏற்படுத்திவிட்டார்கள். தென்னிலங்கையிலுள்ள பலபுத்தபிக்குகளும் அரசியல்ஸ்தாபனங்களில் தொடர்புகொண்டு மக்களிடையே பிளவு அதிகரிக்க வழிகோலுகின்றார்கள். இதனை அவர்கள்நிறுத்திப் புத்தபிரானின் போதனைகளையும், அன்பையும், அகிம்சையையும் போதிக்கமுற்படுவரேல் அது பயனுடையசெயலாகும்."

மேற்கண்டவாறு மன்னார்ப் பிரதிநிதியான திரு. வி. ஏ. அழகக்கோன்அவர்கள் அங்குள்ள புத்தகோவிலில் அன்றுநடைபெற்ற பொதுக்கூட்டம்ஒன்றில் பேசியிருக்கின்றார். சமய, சாகிய பேதம்பாராது ஒத்துழைக்க வேண்டும்; அப்போதுதான் இலங்கை பொருளாதார வளம் பெற்றுச் சுபீட்சமடையுமென்று சிங்களஅரசியல்வாதிகளும், மற்றும்பிரமுகர்களும் அங்கங்கெல்லாம் பொதுமேடைகளிலே மடைதிறந்தாற்போன்று தேனொழுகப்பேசுகின்றனர். அகஸ்மாத்தாக அன்று யாழ்ப்பாணம்வந்த போக்குவரத்துமந்திரியும் "எதிர்பாராதவிதமாகப் பாதிக்கப்பட்ட எமது கட்பு மீண்டும் புத்துயிர் பெறுமென நம்புகிறேன்" என்று உச்சிகுளிரப் பேசியிருக்கின்றார். ஆனால், தனிச்சிங்களசட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது பற்றிச் செய்யப்பட்டுள்ள மூன்று தீர்மானங்களும் மொழிவிஷயமாய் அரசாங்கம் மீளவும்ஆலோசனைசெய்து தனதுபழையதவறுகளைத்திருத்திக்கொள்ளும்என்று ஓரளவு நம்பிக்கைகொண்டிருந்த தமிழ்ப்பேசும்மக்களுக்குப் பெருமஏமாற்றத்தை உண்டுபண்ணுவனவாகும். 1960-ம்ஆண்டு முதல் தெலிபோன் இடாப்புப் புத்தகமும், இலங்கைறெயில்வேயின் அடையாளச்சின்னத்திலுள்ளஎழுத்துக்களும், அரசாங்க கடிதங்கள்வைத்து அனுப்பப்படும் உறைகள்மீதுள்ள எழுத்துக்களும் சிங்களத்தில்மட்டுமே இருக்குமென்று முடிவுசெய்திருப்பதிலிருந்து அரசாங்கம் தனது தனிச்சிங்களமொழிச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் எத்துணை கண்ணுங்கருத்துமாய் இருந்து வருகிறதென்பது இனிதேபுலனாகின்றது.

தனிச்சிங்களசட்டம் என்று அரங்கேறியதோ அன்றே இலங்கையில் அமைதிகலைந்தது. சமூக ஐக்கியம் குலைந்தது. தமிழ் மாகாணங்களிலே மந்திரிகள் தலைகாட்டமுடியாத நிலைமை பிறந்தது. தமிழரசுக்கட்சியினரின் சத்தியாக்கிரக இயக்கம் பிறந்தால் நிலைமைமோசமாகுமெனஉணர்ந்தபிரதமர் "நியாயமானஅளவு தமிழ்உபயோகம்" என்ற துறையில் இறங்கினார். அதற்கேற்றமுறையிலே ஆறு மாதகாலத்துள் மொழிச்சட்டத்தைத் திருத்துவதாகச் சொல்லித் தமிழரசுக்கட்சியுடன் ஓர்உடன்பாட்டுக்குவந்தார். ஒன்றொன்றாய் மாதங்களும் கழிந்துகொண்டு போகின்றன. ஆனால், இன்னுமே எதுவும்நடைபெற்றதாயில்லை. நியாயமான அளவு தமிழ்உபயோகத்துக்குப் பதில் தனிச்சிங்கள உபயோகத்துக்காக வழிதுறைகளே செய்யப்படுவதானது தமிழ்ப்பேசும் மக்களின்மனதை மீட்டும்மீட்டும் புண்படுத்துவது மாத்திரமல்ல, குரோதமனப்பான்மையை மேலும்வளர்த்து நாட்டின்ஐக்கியத்தையும் சீர்குலைத்துவிடும். பிரதமர்பண்டாரநாயகா என்றைக்கும் பிரதமராய், சிரஞ்சீவியராய் இருக்கப்போவதேயில்லை. ஆனால், அவர் இலங்கையின் பெருமைவாய்ந்த சரித்திரத்தில் இடம்பெறவிருக்கும் தமது ஆட்சிகாலத்திலே சிறுபான்மையினரின் மொழியுரிமைமுதலாம் நியாயமான உரிமைகளையும், கௌரவத்தையும் காத்தாரா? என்றவினாவுக்கும் விடைகூறவேண்டிவருமென்க.

---

● அமெரிக்ககடற்படையிலே முன்னர் ஓர்வைத்தியஅதிகாரியாய் இருந்துவந்தவரான டக்றர் ஜெறோல்ட் பறெல்அவர்கள் சிலவருடங்களின்முன் மேரிநொல்சபையில் சேர்ந்துகுருப்பட்டத்துக்குப்படித்துச் சமீபத்திலே ஆச்சபையில் ஓர் குருவாக அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

## சோவியற்தலைவரின் வீழ்கை

இந்நாட்களிலே ருஷியாவில் நிகழ்ந்துள்ள இருசம்பவங்கள் அகிலமுழுவதும் பெரிதும்பிரமிப்பை உண்டுபண்ணினஎனலாம். அவற்றில் ஒன்று, இரண்டாவது செயற்கைச்சந்திரன் மேலேதள்ளப்பட்டதாகும். மற்றது, ருஷிய பாதுகாப்புமந்திரியும், போர்வீரர் திலகமுமான 61வயதுடைய மாஷல்ஜோர்ஜ் சுகோவ் தனது அதிகாரபதவியிலிருந்து கீழேதள்ளப்பட்டதாகும். இன்று உன்முறை, நாளை என்முறை என்றவாறாய் மலன்கோவ், மொலற்றோவ், ககநோவிச், ஷெப்பிலோவ் ஆதியாம் ருஷியதலைவர்கள் பதவிகளிலிருந்துதள்ளுண்டு அவமதிக்கப்பட்டதுபோல இன்று சுகோவின்முறைவந்து இவரும் உயர் பதவியிலிருந்து பெருங்குற்றச்சாட்டுகளுடன் தள்ளுண்டு அவமதிக்கப்பட்டிருக்கின்றார். ஆனால், "தலைதப்பியது தம்பிரான் செயல்" என்று சற்றேஇவர் நிம்மதியடையலாம். ஹங்கேரியின் முன்னைநாள் மந்திரிகளில் ஒருவரான திருமதி அன்னா கெத்லி தற்போது தென்மார்க்நாட்டிலே தங்கியிருக்கின்றார். இவர் மாஷல் சுகோவுக்குச் சூட்டியிருக்கும் புகழ்மாலை — அதாவது, "சுகோவின்வீழ்கை ஓரளவு பழிதீர்க்கும் மகிழ்ச்சியை ஊட்டுவதாகும், ஹங்கேரியமக்களின் சுதந்திர போராட்டத்தை மிருகத்தனமாக அடக்கியவர் இவர்தான்" என்று சூட்டியிருக்கும் புகழ்மாலையன்றே இந்தவேளை அவரின் சிவகாருண்ணியத்தை உலகறியச்செய்வதாகும். ஸ்ராலினுடைய மரணத்துக்குப்பின் சோவியற்தலைவர்கள் அடிக்கடி தங்கள்பதவிகளிலிருந்து நீக்கப்படுவதற்கு அடிப்படையான காரணம்ஒன்று இருக்கத்தான்வேண்டும். சுகோவைப் போன்ற உயர்தர இராணுவஅதிகாரிஒருவர் அவமதிக்கப்பட்டிருப்பதானது சோவியற்தலைவர்கள் கும்பலுள்நிலவும் பலவீனத்தையும், பிளவையும் காட்டுவதாகுமென்று அமெரிக்கஜனாதிபதி போலும் உலகஅரசியற்தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதும் ஈண்டுகவனிக்கற்பாலதாகும். மற்றோர் சோவியற்தலைவரான புல்கானின் பெயரும் ஏற்கனவேமங்கத்தொடங்கிவிட்டது. இன்று சோவியறஆட்சிப்பீடத்தில் தலைதூக்கிநிற்கும் நிகிதா குருஷெவ்வின் கதியும் வருங்காலத்தில் யாதாகுமோ?

---

● மேரிநொல்சபையைச் சேர்ந்தவரும், சென்சீனுவிலுள்ள கடைசியான அமெரிக்கமேற்றிராணியாருமான வால்ஷ்ஆண்டவர் தமதுமேற்றிராணித்துவஅபிஷேக முப்பதாம் ஆண்டுவிழாவைச் சமீபத்திலே கம்யூனிஸ்தச்சிறைச்சாலைஒன்றில் கண்டுகளிக்கலாயினர்.

● புறுஜெஸ்நகரிலுள்ள ஐரோப்பியகல்லூரியின் தலைவரும், டச்சுப் பாராளுமன்றத்தின் முன்னைநாள் அங்கத்தவருமான டக்றர் எச். புறாக்மன்ஸ்அவர்கள் மனந்திரும்பி லோபெம்எனுமிடத்திலுள்ள ஆசீர்வாதப் பர்சபை ஆச்சிரமத்திலே கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்திருக்கின்றார். இவர் ஹலந்தின் முதன்மைவாய்ந்த புரொட்டஸ்தாந்தருள் ஒருவராவர்.

## கம்யூனிஸ்தரும் கம்யூனிஸமும்

கம்யூனிஸ்த கிழக்குஜேர்மனியின் முதன்மைவாய்ந்த மதியூகிகளில் ஒருவரும, தனது 56வருடசீவியத்தில 26 வருடகாலம் ஓர்கம்யூனிஸ்தராய் இருந்துவந்தவருமான திரு. அல்பிறெட் கன்ரறோவிக்ஸ்என்பவர் சமீபத்திலே சுதந்திர மேற்குபேர்ளின்நகரில் போய் அடைக்கலம்புகுந்திருக்கின்றார். "முரட்டுத்தனம், மூடத்தனம, பலாத்காரம், நீதியீனம், வெள்ளப்பிரவாகம் போன்று பொய்புரளிகளின் பெருக்கம், சமயசுதந்திரத்தை அடக்கியொடுக்குமகொடுந்தன்மை ஆதியன மிதமிஞ்சி அதிகரிப்பதெல்லாம் நெடுங்காலம் நிலைத்திருக்கப்போகாத கொந்தளிப்புகளென்ற அச்சமற்றநம்பிக்கையிலே வருடக்கணக்கில் சாட்டைவிட்டுவெளியேறும் தீர்மானத்தைப் பின்போட்டுக்கொண்டு வாலானேன்; ஆனால், அத்துணைமனோவேதனையை உண்டுபண்ணி உள்ளத்தைப்புண்படுத்திய — விசேஷமாகப் பழையகம்யூனிஸ்தர்களுக்கு அவ்வாறு செய்த ஹங்கேரிய துயரகாதகசம்பவமானது எனதுநம்பிக்கையையும, எனது எண்ணத்தையும் பாழாக்கிவிட்டது. பாசிஸ்தத்தையும், பாசிஸ்தஅநாகரீகத்தையும் எதிர்த்துச் சுதந்திரத்துக்கும், உரிமைக்குமாகப் போராடிக்கொண்டிருக்கிறோமென்றும் நாம நம்பியிருக்கும்போது, அநாகரீகம் வார்த்தையிலும், செயலிலும், போக்கிலும் எமக்குப்பின்னாலேயே திரும்பவும எழுந்திருக்கிறது" என்று அவர் சுதந்திரபேர்ளின் வானொலியில் பேசியிருக்கின்றார்.

---

## இரண்டாவது செயற்கைச் சந்திரன்

மற்றோர் செயற்கைச்சந்திரனையும் ருஷியாமுன்போல வெற்றிகரமாக வானவீதியில் மிதக்கவிட்டுள்ளதாக மஸ்கோவானொலி சென்ற 3-ந்திகதி அறிவித்துள்ளது. இந்த இரண்டாவது உபகிரகம பூமியிலிருந்து 930 மைல் உயரத்திலே விநாடிஒன்றுக்கு 8,000 மீற்றர்வேகத்தில் பிரயாணஞ்செய்து 102 நிமிஷங்களுக்குஒருதரம் பூமியைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. இந்த உபகிரகத்தில் நாய்ஒன்றும் உயிருடன் வைக்கப்பட்டுள்ளது. அந்தநாய்உயிருடன் அங்கிருக்கிறதென்றும், அதில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லையென்றும் முதலில்கிடைத்த சமிக்ஞைகள் தெரிவித்திருக்கின்றன.

முதலாவதுசந்திரனிலிருந்து கிடைத்ததைப்போன்றபீப், பீப், பீப்என்றஒலி இதிலிருந்தும் கிடைக்கின்றது. நவீன விஞ்ஞான சாதனங்கள், றேடியோஒலிபரப்பிகள் முதலியன எல்லாம் அமைக்கப்பட்ட இந்தப்புதியசந்திரன் அரைத்தொன் (1,120.7)றாத்தல் நிறையுள்ளதென்று சோவியற்செய்திஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது. முதலாவது செயற்கைச்சந்திரனின்நிறை 183 றாத்தல்மட்டுமேயாகும். இது சென்றஐப்பசிமாதம் 4-ந்திகதியன்று வானவீதியில் மிதக்கவிடப்படலாயிற்று. அதிலிருந்து சரியாய்ஒருமாதத்தின்பின் புதியசந்திரன் மிதக்கவிடப்பட்டிருக்கிறது. இதுவும் முந்தியதைப்போன்று நிரட்சரேகைக்கு 65 பாகைசாய்மானமாகவே உலகத்தைச்சுற்றுகின்றது.

நாய் உயிருடனிருப்பதற்காக வானமண்டலத்தின் சீதோஷ்ணமாறுதல்கள் உள்ளேபுகுந்து தாக்காதுஅமைக்கப்பட்ட ஒருபெட்டியினுள் அதுவிடப்பட்டு, அதற்குத்தேவையான ஆகாரமும், அத்துடன் அதனிடம்தோன்றும் மாறுதல்களை அவ்வப்போது தெரிவிக்கக்கூடிய ஒலிபரப்பும் விஞ்ஞானக்கருவிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. இச்சந்திரனுள் சூரியவெளிச்சத்தைப் பற்றிய செய்திகளைச்சேகரிக்கும் சாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னமும், "கொஸ்மிக்" கதிர்களை ஆராயும்சாதனங்களும், சூடு, அமுக்கம் போன்றவைகளை ஆராயும் சாதனங்களும், செய்திகளை ஒலிபரப்பும்கருவியும் இடம்பெற்றுள்ளன. உயிருள்ள பிராணி ஒன்றுடனும், பல்வேறு விஞ்ஞானசாதனங்களுடனும் வானவெளியில் பறக்கவிடப்பட்டிருக்கும் இந்த உபகிரகத்தின்மூலம் வானமண்டலத்தின் இரகசியங்கள் புலப்படுமென்று சொல்லப்படுகிறது. சென்ற 3-ந்திகதி காலை 8-30 மணியுடன் ருஷியாவின் முதலாவது செயற்கைச்சந்திரன் 411 தடவை உலகத்தைச்சுற்றியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## கம்யூனிஸ்த பத்திரிகை ஆசிரியர்

நியூயோர்க்நகரிலே பிரசுரமாகும் "டெய்லி வோக்கர்" என்றகம்யூனிஸ்த பத்திரிகையின் வெளிநாட்டுஆசிரியரான திரு. யோசெவ் கிளார்க்என்பவர் 28வருடகால சேவையின்பின் சமீபத்திலே தமதுபதவியை இராசினாமாச் செய்திருக்கின்றார். தனது இராசினாமாக்கடிதத்திலே, தான்எடுத்துக்கொண்ட இந்த நடவடிக்கைக்கான நியாயங்களாக, சுதந்திரகொள்கைகளைக் கட்சித்தலைமைப்பீடம் ஒப்புக்கொள்ளத் தவறியதும், சென்றவருடம் உண்டான ஹங்கேரியசுதந்திரஎழுச்சியை ஆயுதபலத்தைக்கொண்டு நசுக்கியதுபோன்ற குரூரத்தனமான சோவியற்நடவடிக்கைகளிலிருந்து போலித்தனமெல்லாம் பகிரங்கத்துக்கு வந்ததுமேயென எடுத்துக்கூறியிருக்கின்றார்.

"ஐக்கிய அமெரிக்கதேச கம்யூனிஸ்த கட்சி அங்கத்தவர்களென அறிவிக்கப்பட்டிருந்த 17,000 பேரில் குறைந்தபட்சம் 7,000 பேர் சென்றவருடத்திலே கட்சியைவிட்டு வெளியேறியுள்ளனர்; கடந்தபத்துவருடகாலத்திலும் ஏறக்குறைய 60,000 பேர் வெளியேறியிருக்கின்றனர்" என்று காலங்கண்ட கம்யூனிஸ்தகட்சித்தலைவரும், கம்யூனிஸ்தபத்திரிகை ஆசிரியருமான அவர் கூறுகின்றார். "ஸ்ராலின் காலத்திற்போல் ஏன், என்னத்துக்கு, எப்படியென்று சொல்லுவதற்குக் கடமையில்லாது சரியோ அல்லதுபிழையோ ஏதேதோபிரசித்தமாக அறிவிக்கப்பட்டது; ஒருவர் நம்பிக்கையின்பேரில் ஒப்புக்கொள்ள வேண்டியிருந்தது" என்பதை இவர்விளங்கப்படுத்திச் [illegible] தனைக்கட்டுப்பாடுசெய்ய எத்தனித்த[illegible]க் கம்யூனிஸ்தகட்சி அதிகாரிகள்மீ[illegible] குற்றஞ்சுமத்தியிருக்கின்றார்.

"ஸ்ராலினைப்பற்றிய குருஷெவ்வின்வெளிப்படுத்துதல்களின்போதோ, அன்றேல் ஹங்கேரிய சுதந்திரஎழுச்சியின்போதோ நான் இராசினாமாச் செய்யவில்லை; ஏனெனில், கட்சிக்குள்ளே ஸ்ராலினிஸத்தை எதிர்க்கிறவர்களின் நியாயத்தைமுன்னிட்டு நான் இன்னுமே நம்பிக்கைகொண்டிருந்தேன்; அப்படியிருந்தும் கட்சியிலே நான்கொண்டிருந்தநம்பிக்கை இறந்துபட்டுவிட்டது" என்பதை அவர்நன்றாக விளக்கியிருக்கின்றார்.

---

● விவகாரத்துச்செய்தபின் மறுபடியும் விவாகஞ்செய்துகொண்டவர்களுக்குத் திவ்வியநன்மை வழங்க அங்கிளிக்கன்சபைமகாநாடு அனுமதித்ததுபோன்ற சிலசெயல்களையிட்டுத் தமக்குள்ள வெறுப்பைத் தெரிவித்து இங்கிலாந்திலே லவுண்டநகர் அங்கிளிக்கன்சபைப் பாதிரியாராயிருந்த கனம் ஹூபேட் லின்ரன் ஷீல்ட்ஸ்அவர்கள் தமதுபதவியை இராசினாமாச்செய்திருக்கின்றார். தற்போதுஇவர் கத்தோலிக்க திருச்சபையில் சேரஎண்ணுவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

## ஞானோபதேசப் பரீட்சை

## 22-11-57

நாலாம் வகுப்புத்தொடக்கம் எஸ். எஸ். சி. வகுப்புஈறாகஉள்ள கத்தோலிக்கபிள்ளைகளின்தொகையை வகுப்பு வகுப்பாகக்குறித்துப் 14-11-57-க்கு முன் அனுப்பிவைக்கும்படி தலை[illegible] ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்[illegible]கிறார்கள்.

J. S. C., Prep. S. S. C., S. S. C. வகுப்புகளில் வேறுஞானோபதேசத்திட்டங்கள் பின்பற்றப்பட்டால் அவைஎவையென்று விபரமாகக்குறிப்பிடவேண்டும்.

PHILIP PONNIAH,
Gen. Manager of R. C. Schools
Jaffna, 5-11-57.

---

### பஸ்களும், வான்களும்

இலங்கையின் முக்கியநகரங்களுக்கிடையே வான்கள் களவாகஓடுவதை அடுத்தவருடஆரம்பமுதல் தடைசெய்யப் போக்குவரத்துச்[illegible]பை உத்தேசித்திருக்கிறது. தற்போது முக்கியமான பலநகரங்களுக்கிடையே வான்கள் களவாகஓடுகின்றன. அதனால் பஸ்களின் வருமானம் குறைகின்றது. பஸ்கள் தேசீயமயமாக்கப்பட்டதும் வான்களின்தொல்லைகள் முற்றாக அகற்றப்படவிருக்கின்றன.

### பயிற்சிபெற வந்துள்ள மாணவர்கள்

அம்பாறையிலுள்ள தொழில்நுட்பக்கல்லூரியிலே பயிற்சிபெறுவதற்காக வெளிநாடுகளிலிருந்து பலமாணவர்கள் அங்குவந்திருக்கிறார்கள். இவர்கள் இந்தோனேஷியாவிலிருந்தும், மலாயாவிலிருந்தும்வந்தவர்கள். வெளிநாடுகளிலுள்ள—முக்கியமாகத் தென்கிழக்கு ஆசியநாடுகளிலுள்ள மாணவர்கள் கொழும்புத்திட்ட உதவியோடு நிறுவப்பட்ட அம்பாறைத் தொழில்நுட்பக்கல்லூரியிலே பயிற்சிபெறுவார்களெனத் தெரியவருகிறது.

### பருத்தித்துறைப் பஸ்போக்குவரத்து

பருத்தித்துறை - யாழ்ப்பாணப் பஸ்கம்பெனி ஊழியர்கள் வேலைநிறுத்தஞ்செய்தகாரணமாகத் தடைப்பட்டிருந்த பஸ்பிரயாணசேவைகள் தற்போது ஓரளவுசீராக நடைபெறுகின்றன. பருத்தித்துறை-கீ[illegible]லை, பருத்தித்துறை-கொடிகாமம், பருத்தித்துறை-தொண்டமானாறுப்பஸ்சேவைகளை வடமாராட்சி ஐக்கியமோட்டார்சேவைச்சங்கமும், பருத்தித்துறை-யாழ்ப்பாணம், பருத்தித்துறை-மருதங்கேணிப் பஸ்சேவைகளை கொதேண் ஓம்னிபஸ் சங்கமும் பொறுப்பேற்று நடத்திவருகின்றன.

### அபாயகரமான வேடிகள்

அடுத்துவரும் கிறிஸ்மஸ்விழாகாலத்திலே அபாயகரமானவெடிகள் விற்கப்படுவதைத் த[illegible]ட செய்யுமாறு உள்நாட்டுமந்திரி காரியாலயம் பொலிசரைக்கேட்டுள்ளது. வெடி மருந்தில் அலுமீனியம் கலப்பதைத் தடைசெய்யும் கெசற்அறிக்கையைத்தொடர்ந்தே இவ்வாறுபொலிசர் கேட்கப்பட்டிருக்கிறார்கள். வெடிகள்செய்வாரின் பெயரும், விலாசமும் ஒட்டப்படாதவெடிகளையும், அபாயகரமான வெடிகளையும் விற்கிறவர்கள்மேல் வழக்குத்தொடரும்படியும், அப்படியான வெடிகளை வாங்குகிறவர்களை விசாரணைசெய்யும்படியும் பொலிசருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

---

### நன்றியறிதல்

யேசுவின் திருஇரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயமாதாவினதும், அர்ச். நீத்தம்மாள், அர்ச். தெரேசம்மாள், அர்ச். அந்தோனியார் என்பவர்களின் சலுகையாலும் யான்கேட்ட மன்றாட்டுகள்யாவும் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக.

மாதகல் S. V.


## மரித்தோர் நினைவு

உத்தரிக்கிற ஆத்துமாக்கள் ஈடேற உதவும் செபங்கள், பிரார்த்தனை, மனவல்லயச் செபங்கள் அடங்கிய புத்தகம். ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

விலை சதம் 15. தபாற்கூலி சதம் 5.

க. பொ. த. G. C. E. பரீட்சைக்கு உரியன.

**கும்பகர்ணன் வதைப்படலத்துக்கு வினுக்களும் விடைகளும்**

விலை சதம் 60. தபாற்கூலி சதம் 10.

## திருவிளையாடற்புராணம் வசனச்சுருக்கம்

செய்யுள்களின் பொருளும், வடமொழி அரும்பதங்களின் அகராதியும் சேர்ந்தது.

விலை சதம் 60. தபாற்கூலி சதம் 10.

## செய்கைமுறைப் பூமிசாஸ்திரம்

மாணவரின் சுயமுயற்சியை விருத்திசெய்யும் முறையில் பயிற்சிகளும், விளக்கக்குறிப்புக்களும், குறிப்புப்படங்களும், வினுக்களும் அமைந்தன.

விலை ரூபா 2-50. தபாற்கூலி சதம் 35.

அர்ச். பிலோமினு அச்சகம்,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


## நானுசங்கதிகள்

● "உலகம் ஓர்புதியயுகத்தில் பிரவேசித்திருக்கிறது; அதுதான் கிரகயாத்திரையுகம்; மனிதன் சந்திரன் முதலான கிரகங்களின்மீது வெற்றிகொள்வதை எனதுவாழ்நாளில் இருந்துபார்க்க வேண்டுமென்பதுதான் எனது பேராவல்; ஆனால், அது நிறைவேறாமல் போகலாமென்று நினைக்கும்போது கவலையாக இருக்கிறது" என்று இந்தியபிரதமர் நேரு சென்ற 2-ந் திகதியன்று புதுடில்லியிலே இந்திய சர்வகலாசாலைகளின் மாணவர்கள் விழாவில் கூறலாயினர்.

● வானவெளியில் ருஷியாமிதக்கவிட்டிருக்கும் இரண்டாவது செயற்கைச்சந்திரனில் உலகஞ்சுற்றிவரும் நாய் இதற்கென்றேபயிற்றப்பட்டதென்றும், அது சந்திரனுடன் இரண்டுஅல்லது மூன்று வாரங்களுக்குத்த[illegible] உயிருடனிருக்குமென்றும், அதன[illegible] நாடித்துடிப்புகள் சிலகருவிகளால் ஒலிபரப்பப் படுகிறதென்றும் செய்திகிடைத்திருக்கிறது. இது 'கன்குஸ்' என்ற ஓர் பெண்நாயாம்.

● ருஷியா மிதக்கவிட்ட முதலாவது செயற்கைச்சந்திரனின் வானொலி ஒலிபரப்பிகள் இருவாரங்களின்முன் நின்றுவிட்டன. இது மணித்தியாலம் 18,000 மைல்வேகத்தில் பிரயாணஞ்செய்கிறது. அதே வேகத்தில்தான் அதன் இரண்டாவதுசெயற்கைச்சந்திரனும் செல்லுகிறது. ஆனால், முதலாவதைவிட இரண்டாவதுசந்திரன் பூமியிலிருந்து அதிகம்உயரத்தில் சுற்றுவதால் இது உலகத்தைச்சுற்றிவர அதிககாலம் பிடிக்கிறது.

● ருஷியாவின் இரண்டாவதுசெயற்கைச்சந்திரனுக்கு 'மட்னிக்' எனப்பெயரிடப்பட்டுள்ளது. அதனுள் இருந்துவரும்நாய் அமைதியாக இருப்பதுடன் அதன்தேகநிலையும் திருப்திகரமாக இருப்பதாகவும் மஸ்கோ வானொலி சென்ற 3-ந்திகதி தெரிவித்துள்ளது. இந்நாய் உயிருடன்திரும்பினுல் மறுமுறை மனிதர்களும் செயற்கைச்சந்திரனில் பிரயாணஞ்செய்வது நிச்சயமாகிவிடுமென்றும் அது தெரிவித்திருக்கிறது.

● பிலிப்பைன்ஸ்நாட்டின் தலைப்பட்டணமாகிய மனிலாநகர் மேயருக்குச் சொந்தமான லேடிதியேற்றரில் திக்கெற்சலார்கொடுத்துமாத்திரமல்ல, பத்துஎலிகளின் வால்களைக்கொடுத்தும் சினிமாப்பார்க்கலாம். கமக்காரரின் முதலாம்நம்பர் எதிரிகளான எலிகளை ஒழிக்கும்இயக்கத்தில் உதவிசெய்யுமுகமாகவே மேயர் பெஸிலியோ மனிபூல் இச்சலுகையை அளித்திருக்கிறார். ஆயிரக்கணக்கான எலிகளின் வால்கள் தற்போது அவர்வசம்உண்டாம்.

● வடஇத்தாலியைச்சேர்ந்த தெசியோநகரிலிருந்துபோன யாத்திரிகர்கள் குழுவொன்று பேவிகார் ஒன்றைப் பாப்பரசருக்கு அன்பளிப்புச்செய்வதற்காக அதனைத்தோள்களின்மேல்உயர்த்தி வேறுவேறான மூன்றடுக்குப்படிகள்வழியாகத் தூக்கிச்சென்றுபோய் அவரின்பேட்டி பெறலாயிற்று. இந்த அன்பளிப்பு காஸ்தெல்கான்டல்போவிலுள்ளகோடைகால வாசஸ்தலத்தில் செய்யப்படலாயிற்று.

● இந்தியாவிலே பஸித்தானம் மகாராஜாவான சேர் பகதூர் சிங்கின் குமாரத்தியான குமாரிசீத்தா இளவாசி மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கத்தோலிக்கராகியிருக்கின்றார். இவர் இத்தாலியிலே நேப்பிள்ஸ் நகரில் ஓர்செல்வந்தரான ஒருபொறியியல்நிபுணரின் புதல்வரான டக்றர் ஜென்னுரோ ஒட்டியேறிஎன்பவரை மூன்றுவாரங்களின்முன் திருமணஞ்செய்திருக்கின்றார்.

✻ உலகிலே சுற்றளவில் அதிகங்கூடியமரம் எங்கே இருக்கின்றது?

மெக்சிக்கோவைச்சேர்ந்த ஏக்சாகா மாகாணத்திலே இருக்கின்றது. இது சாந்தாமரியா டெல்ரியூல்என அறியப்படுகிறது. அடிமரத்தின் சுற்றளவு 160 அடி. உலகில் இதுவரை அளக்கப்பட்டமரங்களிலெல்லாம் அதிகங்கூடிய சுற்றளவுள்ளமரம் இதுவாகும். 37பேர் கைகோத்துக்கொண்டு இதனைச்சுற்றிவர நிற்கலாம்.

✻ உலகில் மிகப்பெரியமுட்டையிடும் பட்சி யாது?

தீக்கோழியே. இது தன்முட்டைகள் 6முதல் 7அங்குலம்வரை நீளமும், 4முதல் 6அங்குலம்வரை குறுக்களவுமுடையன. இவைகளை அவிக்க 40நிமிஷம்செல்லுகின்றது.

✻ உலகில் அதிகஞ்சிறிய முட்டையிடும் பட்சி யாது?

ஜமேய்க்காதீவில் காணப்படும் வெர்வெயின்என்றபட்சியே. இதன்முட்டைகள் நீளத்திலே அரைஅங்குலத்திலும் குறைந்தனவாய் முத்தைப்போன்றுள்ளன.

✻ ரோமாபுரியிலே பல்வேறு கன்னிகாசபைகளைச்சேர்ந்த எத்தனைமடங்கள் இருந்துவருகின்றன?

447 கன்னிகாசபைகளைச் சேர்ந்த மடங்கள் இருந்துவருகின்றன. அவற்றிலே அச்சபைகளைச் சேர்ந்தவர்களாய் 15,997 கன்னியாஸ்திரிமார் சஞ்சரிக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரலோகத்தின் சுவர்ன திறவுகோல்

( சி. எஸ். காயகம், ஸ்ரேஷன்மாஸ்றர், கெமுபு — மலாயா )

நாம் பாவிகள்என்பதை முத்திரை யிட்டு எண்பிக்கும் தேவதிரவிய அநு மானம் பச்சாத்தாபமாகும். நாம் எவ்வளவு புண்ணியவாளராய், பரிசுத்த வான்களாய் இருந்தபோதிலும் அத ஞல் நாம்பாவிகள் அல்லவென்று சொல லவியலாது. நாம் பாவிகளாயிராவிடில் கிறீஸ்துநாதர் இந்த உலகத்துக்குவரவும், பாடுபடவும், சிலுவையில் அறையுண்டு சிவனேவிடவும்வேண்டிய அவசியமே யிராது. அத்துடன்இந்தத்தேவதிரவிய அநுமானத்தை ஏற்படுத்தவேண்டிய அவசியமுமேயிராது. "நான் பாவி யல்ல" என்று இருதயநேர்மையோடு சொல்லக்கூடியவர் இப்பூவுலகில் எவரு மேயில்லை. ஆம், நாமெல்லோருமே பாவிகள். ஒருவரில்ஒருவர் கூடியபாவி கள். பாவத்திலசென்மித்து, பாவத்தில் பிறந்து, பாவத்திலவளரும் மானிடப் பிறவிகள்.

ஒருநாள் வேதபாரகரும், பரிசேய ரும் விபசாரத்தில்பிடிபட்ட ஓர்ஸ்திரீ யை இழுத்துச்சென்று கிறீஸ்துநாதர் முன்பாகநிறுத்தி, "போதகரே! இந்த ஸ்திரீ இப்பொழுதுதான் விபசாரத்தில் பிடிபட்டாள்; இப்படிப்பட்டவர்க ளேக் கல்லாலெறிந்து கொல்லவேண்டு மென்று மோயீசன் வேதப்பிரமாணத் தில் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கி ருர்; அப்படியிருக்க நீர் என்னசொல் லுகிறீர்?" என்று அவரிடம்கேட்டார் கள். அவரோ இந்தமதிகெட்டகேள்வி யின்பேரில் தமக்குண்டான விசனத் தையும், துவேஷத்தையும் காண்பிக் கும்பொருட்டு அவர்களை நிமிர்ந்துதன் னும்பார்க்க மனமில்லாதவராய்க் கீழே குனிந்தவண்ணம் தமதுவிரலால்ஏதோ தரையில் எழுதிக்கொண்டிருந்தார். கடைசியாய் அவர்களுடைய விடாப் பிடியான அலட்டல்களின் நிமித்தம் அவர்நிமிர்ந்து பார்த்து, "உங்களுக் குள்ளே பாவமில்லாதவன் இவள்மே லே முதலாவது கல்லெறியக்கடவான்" என்று வசனித்தார். அவர்களோ இதைக்கேட்டதும் என்னசொல்வது, என்னசெய்வதென்றறியாது நின்றஇட முந்தெரியாது வந்தவழியே திரும்பிப் போய்விட்டார்கள் (அரு. 8: 3-7).

ஆகவே, "என்னிடத்தில் பாவமில் லை, நான் பாவியல்ல" என்று சொல் லிக் கைஉயர்த்தக்கூடிய ஒருபுண்ணிய வான்—பரிசுத்தவான் இந்தப்பூமண்ட லத்தில்இல்லை. "எந்த ஒருநீதிமானும் — பரிசுத்தவானும் நாள்ஒன்றுக்கு ஏழுவிசை தவறுவான்" என்பது தூய ஆவியானவரின் வாக்கியம். "என்னி டத்தில் பாவமில்லையென்று எவன் சொல்லுகிருனே அவன்படுபொய்யன்" என்கிருர் அர்ச். அருளப்பர் (1. அரு. 1: 10). "மாம்சமோ துர்ப்பலமுள் ளது" என்கிருர் திவ்வியகர்த்தர் (மத். 26: 41). நாம் பாவிகளான படியால் தான் கிறீஸ்துநாதர் இப்பூவுலகில் தோன்றி, நமதுபாவங்களுக்காக வாக் கிஞல் சொல்லவொண்ணுத நிந்தை அவமானங்களையும், பாடுகளையும் அனு பவித்துச் சிலுவைமரணத்தை அடைந் தார். இந்தத்தேவதிரவிய அநுமானத் தை நமது பாவவிமோசனத்திற்காக அவர் ஏற்படுத்தினுர்.

நிற்க, "நாம் பாவிகள்" என்ருேம். ஆம, இதில் சந்தேகமேயில்லை. ஆயி னும் பாவத்தில் பலவினம் உண்டு. ஆனுல், இங்குநாம் எடுத்துக்காட்டப் போவது இரண்டு வகைப்பாவமே. இதில்ஒன்று, "சென்மபாவம்." மற்றது, "கன்மபாவம்." சென்மபாவமென் பது நமது ஆதித்தாய்தந்தையர் கட் டிக்கொண்ட பாவத்தின்பயனுக நாம் பிறக்கும்போதே சென்மத்தின்வழி யாய் வருகிறபாவமே சென்மபாவம். இ தப்பாவத்திற்கு நாம் உத்தரவாதி கள் அல்ல. ஆயினும் நமது ஆதிப்பெற் றோர் கட்டிக்கொண்ட பாவதோஷத் தினுல் அவர்களோடுகூட நாமுமே மோட்சஉரிமையை இழந்துபோ னேம். இவ்விதம் நாம் இழந்துபோ னஉரிமையைக் கிறீஸ்துநாதர் தமது திருப்பாடுகளினுலும், சிலுவைமரணத் தினுலும் நமக்கெல்லாம் அடைந்துதந் தருளினுர். என்ருலும், நாம் பிறக்கும் பொழுது இந்தமோட்சஉரிமையோடு பிறப்பதில்லை. இந்தஉரிமை நமக்குப்பெற்றுத்தருவது அவர்திருச் சபையில் ஏற்படுத்திய ஏழுதேவதிரவிய அநுமானங்களுள்ஒன்றும, முதலா வதுமான ஞானஸ்நானமே. பிறக்கும் குழந்தைகள் புத்திவிபரம்அறியுமுன் இறந்தால் அவர்களின்ஆத்துமம் இந்த ஞானஉரிமையோடுநேரேபறந்துபோய் மோட்சகரைசேரும். ஆகவே, இந்த மாசற்றகுழந்தைகளை நேரேமோட்ச கரை கொண்டுபோய்ச் சேர்க்கும்வல் லமை ஞானஸ்நானம்என்னும் தேவ திரவிய அனுமானத்துக்கே உண்டு.

இனி, "கன்மபாவ"த்தை எடுத்துக் கொள்வோம். கன்மபாவம்என்பது புத்திவிபரமறிந்தபிற்பாடு நாம்ஒவ்வொ ருவரும் கட்டிக்கொள்ளும்பாவமே கன்மபாவம். இந்தப்பாவத்துக்கு நாமே உத்தரவாதிகளன்றி வேறெவருமன்று. இந்தப்பாவம் இரண்டுவகைப்படும். ஒன்று, அற்பபாவம். மற்றது, சாவா னபாவம். இந்தப்பாவங்களைப் போக் கும் வல்லமை பச்சாத்தாபம் என்னும் தேவதிரவியஅனுமானம் ஒன்றுக்கே யுண்டு. மாசில்லாதகுழந்தைகளை மோட்சகரைசேர்க்கும் வல்லமை ஞானஸ்நானத்துக்கு இருப்பதுபோல், கன்மபாவம் கட்டிக்கொள்ளுகிற நம்மை மோட்சகரை சேர்க்கும்வல் லமை பச்சாத்தாபத்துக்கு உண்டு. எனவே, "பச்சாத்தாபம்" இரண் டாம் ஞானஸ்நானம்என அறியப்படு கிறது. நாம் மோட்சசம்பாவனைக்குப் பறந்துசெல்ல இவ்விருதேவதிரவிய அநுமானங்களும் இரண்டுசிறகுகள் போல் நமக்கு உதவுகின்றன. ஒரு சிறகுள்ளபட்சி மேலெழுந்து பறக்க மாட்டாது. இரண்டுசிறகுகளும் கெட் டியாயிருக்கும் பட்சிமாத்திரமே ஆகா யத்தை ஊடறுத்துப் பறந்துசெல்ல முடியும். இதேபோல் நமதுஇரட்சணியத்திற்கு இவ்விருதேவதிரவியஅநு மானங்களும் இருஞானச்சிறகுகள் போல் உதவுகின்றன. ஞானஸ்நானம் பெற்றும் பச்சாத்தாபம் இல்லா விடில், அல்லது பாவசங்கீர்த்தனம் செய்தும் ஞானஸ்நானம்இல்லாவிடில் நாம் ஒற்றைச்சிறகுள்ள பட்சியைப் போன்று மோட்சஇராச்சியத்துக்குப் பறக்கமுடியாது.

மோட்சகரைசேர்வதற்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் எத் துணை அவசியமோ அதேபோன்று ஞானஸ்நானம்பெற்றுவளர்ந்து புத்தி விபரம் அறிந்தவர்களுக்குப் பச்சாத் தாபம் அத்துணை அவசியமாகும். வளர்ந்தவர்களும், புத்திவிபரம் அறிந்த வர்களுமாகிய நமக்குப் பச்சாத்தாப மின்றேல் நாம் பெற்றுக்கொண்ட ஞானஸ்நானத்தினுல் எவ்வித பிரயோ சனம் ஏற்படப்போவதில்லை. ஆகவே, பிறக்கும்குழந்தைகளைப் பரலோகமாகி யநமதுமோட்சவீடு கொண்டுசெல்லும் "ஏற்றம்" அல்லது "விமானம்" ஞா னஸ்நானம். ஞானஸ்நானம் பெற்ற பின் புத்திவிபரமறிந்த பிள்ளைகளும், வளர்ந்தவர்களுமாகிய அனைவரையும் அவ்வண்ணமே மோட்சவீடு கொண்டு செல்லும் ஏற்றம் அல்லது விமானம் பச்சாத்தாபம்என்னும் தேவதிரவிய அநுமானம் ஒன்றேயாகும்.

(வளரும்)

---

உளமே உலகம்; அதுதானே மோட்சத்தை நரகமாக்கவும், நரகத் தை மோட்சமாக்கவும் வல்லது.

—மில்டன்

---

# மரணப் படுக்கையிலே

சுழன்றுகொண்டே இருக்கிறதுஉல கம். இந்தச்சுழற்சியில்தான் அம்மம்ம! எத்தனை மாறுதல்கள்! புதுமை பழமையாகின்றது. பழமை மறைந் தொழிகின்றது. குழந்தைப்பருவம் வாலிபமாகிறது. வாலிபம் மூப்பாகி றது. மூப்பு சாவாகிறது. மலைகள் சமுத்திரங்களில் மறைகின்றன. சமுத் திரங்களிலிருந்து மலைகள் வெளிப்படு கின்றன. உணர்ச்சியில், உள்ளத்தில், உடலில் எல்லாவற்றிலும மாறுதல்கள் நிகழ்கின்றன.

உலகம ஒரேதிசையில்தான் சுழல் கின்றது. அதில் மாற்றமேஇல்லை. ஆனுல், ஒவ்வொரு மனிதனுக்கும் அவனதுவாழ்வில் ஒருமுறை இச்சுழற் சியில் மாற்றம்ஏற்படுகிறது. முன்னேக் கிச் சுழலும்உலகம் பின்னேக்கி அவ னது பிறப்புக்குச்சென்று மறுபடியும் முன்னேக்கிச் சுழல்கிறது. இது நடை பெறும்நேரமும், இடமும்தான் மர ணப்படுக்கை. இந்தச்சுழற்சியில் கடல் கள் கொந்தளித்து, எரிமலைகள்வெடித் து, வானம நெருப்புமழைபொழிந்து, வையகமே இருண்டுவிடும் சிலருக்கு. பூமாரி பொழிந்து, பழம்பழுத்த பசுஞ் சோலையிலே பறவைகள்பண்பாடும் சில ருக்கு. ஆனுல், பின்னவர் வெகுசொற் பந்தான்.

அன்று ஆனந்தன் கிடந்தது மரணப் படுக்கையில். அந்தநேரம் அத்துணை சீக்கிரம் வருமென்று அவன் கனவில் கூடக் கருதவில்லை. சுற்றிலும் சூழ்ந் திருக்கும் சுற்றத்தவர்கள், அலறி அழும் அன்புருவான அன்னை, மனந் தடுமாறி நிற்கும்தந்தை, மனமுடைந் து மயக்கமுற்றமனைவி, புழுப்போல் துடிக்கும் புத்திரன், இவர்கள்ஒருவ ரும் படவில்லை அவன் கண்ணில். அவன் கண்முன்கண்டது மறுசுழற்சி யில் ஈடுபட்டிருக்கும் உலகம்தான். அச்சுழற்சியில் பூமாரி பொழியவில்லை. ஆனுல், கீதமாரிபொழிந்தது. பசுஞ் சோலைகள் பரவியிருக்கவில்லை. ஆனுல், பாலைவனம் பரந்துகிடந் தது. பறவைகள் பண்பாடவில்லை. ஆனுல், வல்லூறுகள்வட்டமிட்டு வலம் வந்தன. தெள்ளியதென்றல் தெம்பாடு பாடவில்லை. ஆனுல், திமிங்கிலங்கள் திறந்திருந்தன தாடைகளை. அவனு டைய மடமையின் மறுதோற்றம் பாவத்தின் பயங்கரம்.

முதன்முதல் அவன்கண்டது அவ னது குழந்தைப்பருவம். வளமான தெய்வபக்தியுள்ள கிறீஸ்துவகுடும்பத் தில்தான் அவன்பிறந்தான். பெற்ரு ரின் தவப்புதல்வன். நிறைந்தசெல்வத் திற்கு ஒரேவாரிசு. கேட்பானேன் செல்லத்திற்கு! கண்ணேபோல் காத் தனர் பெற்ரேர். ஐந்துவயதில் சேர்க் கப்பட்டான் பாடசாலையில். அப்பொ ழுதே அவனுடைய அழிவுகாலமும் ஆரம்பமாகிவிட்டது. குணத்தின்குன் ருகத் திகழவில்லை அவன். குறும்புத் தனத்தின் குன்ருகத்தான் திகழ்ந் தான். வயதுவந்தால் வளம்பெறும் வாழ்வு என்றெண்ணி வாளாவிருந்த னர் பெற்ரேர். ஆனுல், அவர்களது பனத்திரையில் மண்ணைப்போட்டான் மகன். வளரவளரக் குறும்புத்தன மும் வளர்ந்து, கடைசியில் அது அவ னது அழிவுக்கே ஆணிவேராயிற்று.

சுழற்சியிலே ஒருவேகம். ஆனந்த னுக்கு இப்பொழுது வயதுபன்னிரண்டு, முதல்பாரத்தில் படித்துக்கொண் டிருக்கின்ருன். காலிகள் நண்பர்களா கின்றனர் அவனதுவாழ்வைக் காடாக் க. அதோ! அவனை இந்தநிலைமைக்கு ஆளாக்கியது அந்தச் சிகரெற். புகைக் கிருன் தனது முதல்சிகரெற்றை நண் பர்கள் புடைசூழ. அன்றிருந்தே பிடித்துக்கொள்கிறது புகைபிடிக்கும் பழக்கம். ஒருவழியாக ஓராவட்டம் மறைகின்றது. தட்டுத்தடுமாறி இரண் டாம்பாரத்தை அடைகிருன். அப் பொழுதுதான் ஆரம்பிக்கிறது அவனது அழிவுக்காலத்தின் இரண்டாம்படி. அவன் படிக்கின்றது பாடப்புத்தகங்கள் அல்ல. ஆனுல், இளமையின் இன விரோதி, அழிவின் ஆழ்கடல், ஆபா சப் புத்தகங்கள். அவன் சிந்தையைக் கவர்கின்றது சினிமா. மதியைஇழக் கிருன் மைந்தன். தினம் ஒருசினிமா, நாடகம். இரவில்நேரங்கழித்து வீட் டுக்கு வருகிருன். இப்படியாகச்செல் கின்றது அவன்வாழ்க்கை. 'உள்வாயை மூடினுலும் ஊர்வாயைமூடமுடியாது' என்பதற்கிணங்க ஊரில் அவனது இழி நிலையை இகழ்ந்துபேசுகின்றனர் பலர். இது அவனதுபெற்ருேரின் காதுக்கும் எட்டுகிறது. கண்டிக்கின்றனர் உடனே. ஆனுல், வீட்டைவிட்டே ஓடிவிடுவ தாகப் பயமுறுத்துகிருன் பாவியன். ஆசைக்கு ஒருபுதல்வன், அவனையும் இழக்கத்துணிவில்லை அவர்களுக்கு. நயமாகப் புத்திபுகட்டி, கடவுளிடம் மன்ருடுகின்றனர் அவன் மனந்திரும்ப வேண்டுமென்று. ஆனுல், செல்வனின் சீர்கெட்டபாதையிலே சிறிதும் சீர் திருத்தம்இல்லை. எல்லாம் செவிடன் காதில்ஊதிய சங்காய் முடிகின்றது. பணம்கொடுப்பதால்தான் கெட்டுப்போ கின்ருன்என்று பணம்கொடுக்க மறுக் கின்றனர். வீட்டிலேயே திருடஆரம் பிக்கிருன் தனயன். அவ்வாண்டு இறு திப்பரீட்சையில் அரங்கேறவில்லை அவன்.

வருடங்கள் மறைகின்றன. மூன்ரு வதுபாரத்தில் மும்முறை முயன்று நான்காவது பாரத்தை அடைகிருன். பதினெட்டாவதுவயதில் ஆழ்ந்தஅகழி கள் இன்பஊற்ருகத் தென்படுகின்றன அவனுக்கு. அவனதுவாழ்க்கைப்பாதை யில் கிடக்கும் கூரியமுட்கள் ரோசா மலர்களாகத் தோற்றுகின்றன. இடி யும், மின்னலும் இன்பகீதங்களாகவிழு கின்றன அவன்செவியில். புகைந்தெ ழும் பயங்கரப்புயலைத் தென்றலெனத் தீண்டுகிருன். கோவிலுக்குச் சென் ருன் பெற்ருேருக்காக. பிரசங்கங்க ளைக்கேட்டான் செவியில்விழுந்ததால். ஆனுல், அவனுடையமனம் செல்லவில் லை அவற்றில். பேசுவதெல்லாம் நாஸ் திகம். செய்வதெல்லாம் சீர்கெட்ட செய்கை.

மானங்கெட்டவாழ்விலே மறைகின் றன வருடங்கள். அவனுக்கு வயது இருபது. அழிவின் உச்சநிலையை அடைந்துவிடுகிருன். பெற்ருேரை எதிர்க்கிருன் மரியாதையின்றி. படிப் பில் மனம்செல்லாததால் ஐந்தாம் பாரத்தோடு பாடசாலைக்குப்போகாது நின்றுவிடுகிருன். நேரத்திற்கு நேர்த் தியானஉணவு, அணிய அழகான ஆடைகள், செலவழிக்கப்பணம், கவலை யற்ற வாழ்க்கை. இவைகள் போதா வா அவன்வாழ்வைப் புழுதியில்புரட்ட? மனிதத்தன்மையையும், மனச்சாட்சி யையும்மறந்து, பகுத்தறிவைப்பறிகொ டுத்து, பாவச்சேற்றில் உழல்கின்ருன். குடிப்பழக்கம் அவனது அழிவின் எல் லையாகின்றது. கண்டவர் காறியுமிழ் கின்றனர். பெற்றவர் கதறிக்கண்ணீர் விடுகின்றனர். மண்ணிலே கட்டிய மாளிகையாகிறது அவர்கள் கனவு. ஆனுல், கரையவில்லை அவன்கல்நெஞ் சம்.

சுழற்சியிலே மறைகின்றன இரு வருடங்கள். மணம்செய்தால் மகன் மனந்திருப்புவான் என்றெண்ணி மண முடித்துவைக்கின்றனர் பெற்ருேர். ஏழைக்குடும்பத்தில், நிறைந்த சகோ தரர், சகோதரிகளுடன் பிறந்தஇன்பய னுக அவனுக்குப் பலியிடப்படுகிருள் பாவை பரிமளா. அழிவுப்பீடத்தில் ஆனந்தமாக அமர்ந்திருக்கும் அந்த அரக்கனுக்கு அளிக்கப்படுகிருள் அவள். ஆறுமாதங்கள் அமைதியாக இருக்கிருன் அவனும். மறுபடியும் மாறுகிருன் மிருகமாக. அடியும்உதை யும்தான் பரிமளாவின் வாழ்வில்கண்ட

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே !

இந்தக் கார்த்திகைமாதம் உத்தரிக்கிற ஸ்தலத்தில் துன்பப்படும் ஆத்துமாக்களை நினைவுகூர்ந்து மன்றாடவேண்டிய மாதம்.

இவர்கள் எம்மைப்போல இவ்வுலகில் வாழ்ந்தவர்கள். தமது சீவியத்தைத் தேவனுக்குகந்ததாக்கும் வேலையில் ஈடுபட்டாலும் அதைப் பூரணமாய் நிறைவேற்றாதவர்கள். இச்சீவியத்தைவிட்டு மறுமைச் சீவியத்திற் பிரவேசிக்கும்பொழுது அற்பபாவ அழுக்குகளுடனோ, பாவத்துக்குப் பூரணபிராயச்சித்தஞ் செய்யாமலோ சென்றார்கள். அதை இப்பொழுது தீர்க்கிறார்கள். தீர்த்தபின் பரகதி அடைவார்கள்.

நாம் உலகத்தில் இருக்கும்பொழுது எமதுசெபங்களால், பூசைப்பலி ஒப்புக்கொடுப்பதால், நற்கிருத்தியங்கள் புரிவதால், தபமுயற்சிகளால் ஞானப்பலன்தேடிப் பாவத்துக்குப் பிராயச்சித்தஞ் செய்யலாம். உத்தரிப்புஸ்தலத்தில் இருக்கிறவர்களுக்கு இது சாத்தியப்படாது. ஏனெனில், பலன்தேடும்காலம் பறந்துவிட்டது.

ஆகவே, அவர்களது சகோதரர்களாகியநாம் எமதுபலன்களை அவர்களுக்குக்கொடுத்துக் கடனைத்தீர்த்தால் அவர்கள்சீக்கிரம் பரமன் பாதம் சேர்வார்கள்.

இன்றே தொடங்குங்கள். திவ்விய பூசைப்பலி, சற்பிரசாதம், செபமாலை, சிறுஒறுத்தல்களும், சிறுசெபங்களும். "இரக்கம் உள்ளவர் பாக்கியவாளர். ஏனெனில், அவர்கள் இரக்கம் அடைவார்கள்."

அண்ணை.

## மனிதகுணம் வேண்டாம்

பயங்கரமானகாடு. அந்தக்காட்டில் அமைதியே காணமுடியாத நிலையில்இருந்தது. வெண்மதி வானத்தில் ஊர்வலம்வந்து கொண்டிருந்தது.

இந்த நேரத்தில்தான் ஆண்புலியும், பெண்புலியும் இரையைத்தேடி அலைந்துகொண்டிருந்தன. அப்பொழுது எதிரில்அகப்பட்ட ஒரு யானைக்குட்டியை அடித்து உருசிபார்க்க ஆரம்பித்தன. அந்த இரண்டுபுலிகளும் யானைக்குட்டியின் உடலைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்தன.

அந்தக்காடே அதிரும்படி கர்ச்சித்தபடியே ஒருசிங்கம்வந்தது. அந்தச் சிங்கத்தின் உடலைப் பார்த்தவுடனே அது சாப்பிட்டு இரண்டு நாளாயிருக்கும் என்று தோன்றியது. அந்தச்சிங்கத்தைப் பார்த்ததும் இரண்டு புலிகளும் யானைக்குட்டியின் உடலைப்போட்டுவிட்டு ஓடிவிட்டன. அந்தச்சிங்கம் யானைக்குட்டியின் உடலைப்பசியாற உண்டுகொண்டிருந்தது.

"அந்தச் சிங்கத்தை விரட்டிவிட்டு அவ்வுணவை நாம் எடுத்து வைத்திருந்தாலும் நாளைக்குச் சாப்பிட்டிருக்கலாம். சிங்கத்திற்குப் பயந்து கொண்டு வந்துவிட்டோம்" என்றது ஓடிக்கொண்டிருந்த பெண்புலி.

"பைத்தியமே, உனக்கு ஏன்தான் திடீரென்று மனிதகுணம் தோன்றியதோ தெரியவில்லை. மனிதஇனத்தில்தான் ஒருவன் 'பசிபசி' என்று கதறிக் கொண்டிருப்பான். மற்றொருவன் வயிறுநிரம்ப உண்டு கொண்டிருப்பான். 'பசிபசி' என்று கதறுபவனுக்குப் புசிஎன்று பிடிசோறு கொடுக்கமாட்டான் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறேன். நம்இனத்தைச்சேர்ந்த அந்தச்சிங்கம் எத்தனை நாளாக உணவு உண்ணாமல் இருக்கிறதோ தெரியவில்லை. அது பசியினால் கதறிக்கொண்டுவந்தது. அதனால் அதற்காக அந்தஆகாரத்தைக் கொடுத்து விட்டேன். நாமும் அந்த மனிதகுணத்தைப்போல் நம் இனத்தைச் சேர்ந்த அதற்குப் புசிக்கக் கொடுக்காமல் நாமே உண்ணவேண்டுமென்கிறாயா ? நமக்கு வேண்டாம் அந்த மனிதகுணம் ! என்றது ஆண்புலி.

"ஆம். மனிதகுணம் வேண்டாம்" என்றது பெண்புலியும்.

—'அரசு'

## பெரியார் சிறுவயதில்

அவன் சிறுவன் ; விறகுவெட்டிப் பிழைக்கும் ஏழைத்தொழிலாளியின் மகன். அத்துடன் பெற்றதாயைப் பறிகொடுத்தவன். அந்தச் சின்னஞ் சிறு வயதிலேயே பசித்துன்பத்தையும், குளிரின்கொடுமையையும் தாங்கக்கூடியசக்தி அவனுக்கு இருந்தது. தன்னைப்போன்ற ஏழைமக்கள் வயிற்றுப்பிழைப்புக்காக மிகவும் கடுமையாய் உழைக்கவேண்டியிருப்பதைஉணர்ந்தஅவன்உள்ளம் வேதனையால்வாடியது. அவன் தலையிலே விறகுச்சுமை ஒன்று இருந்தது. கடைத்தெருவிலே அதைவிற்றுவரச் சொல்லியிருந்தார் அவன் அப்பா. தன் எதிரிலிருந்த கூட்டத்தின்மீதே கவனம்சென்றது அவனுக்கு.

கூட்டத்தின் ஒருபக்கத்தில் பெரும்பெரும் பணக்காரர்கள் இருந்தார்கள் ; தோட்ட முதலாளிகள் இருந்தார்கள் ; நிலச்சொந்தக்காரர் இருந்தார்கள். மற்றொருபக்கத்தில் ஆபிரிக்காக்கண்டத்து 'கொங்கோ'க் காடுகளிலிருந்து வேட்டையாடிப் பிடித்துவரப்பட்ட கறுப்புநிற நீக்ரோமனிதர்கள் இருந்தார்கள். அவர்கள்எல்லோரும் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தனர். அவர்களுக்கு அருகே நின்றுகொண்டிருந்த கங்காணிகள் அந்த நீக்கிரோக்களை விலைக்குவிற்றுக்கொண்டிருந்தனர். ஆம், அடிமைவியாபாரம் நடந்துகொண்டிருந்தது. அங்கே செல்வந்தர்கள் ஒவ்வொருவரும் தாம் விலைகொடுத்து வாங்கும் நீக்கிரோக்கள் நல்லபலசாலிகளா என்பதை அறியவிரும்பினர். உடனே அந்தக்கறுப்புமனிதர்களைக் குத்தியும், சாட்டையால் அடித்தும், தரையில்உருட்டித் தள்ளியும் பரிசோதித்தனர்.

இந்தக் காட்சியைக்கண்ட சிறுவனின்உள்ளம் பாகாய் உருகிற்று ; அவன் கண்கள்கலங்கின. "யாருடைய உழைப்பால் தங்கள்வாழ்க்கை உயருகிறதோ அவர்களை மாடுபோல்நடத்துகிறார்களே, இந்தப் பணம்படைத்த முதலாளிகள் ! ஆ... அந்தப்பயங்கரக் கங்காணிகள் !...... இரக்கம்என்பதே மனிதர்கூட்டத்தைவிட்டு மறைந்துவிட்டதா ? மனிதனை மனிதன் இம்சிக்கும் இந்தக் கொடுமை என்றுஒழியுமோ ?" — இப்படி என்னென்னவோ எண்ணி மனத்தைப் புண்ணாக்கிக்கொண்டான்.

'அச்சிறுவன் பெரியவனாகிறான். எதிர்பாராதவிதமாக அந்நாட்டுத் தலைவர்பதவி அவனுக்குக் கிடைக்கிறது. உடனே அவன்செய்யும் முதல்வேலைஎன்ன ? "அடிமைவியாபாரம் இந்நாட்டைவிட்டு அடியோடு அழியவேண்டும்" என்று சட்டம் செய்கிறான். அடிமைகள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள்......' மூடியிருந்த கண்களைத் திறந்தான்சிறுவன். தான் இவ்வளவுநேரம் கண்டது கனவுதான்என்பதை அறிந்தான்.

உடனே அவன் ஒருவைராக்கியம் செய்துகொண்டான். "நான்மட்டும் இந்தநாட்டின் சர்வாதிகாரியானால் இப்போது நான் கண்டகனவை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவேன்." —இந்தத் தீர்மானத்துடன் அவ்விடத்தைவிட்டகன்றான் அச்சிறுவன். பிறகுஅவன் சும்மா இருக்கவில்லை. தனக்குத்தானே படிக்கக் கற்றுக் கொண்டான். அறிஞர்எழுதிய புத்தகங்களை எங்கெங்கோசென்று இரவல்வாங்கிவந்தான் ; இரவுபகல் பாராமல் படித்தான். வளர்ந்து அறிவாளியானான். அப்போது நடந்ததேர்தலில் போட்டியிட்டான். நன்றாகப் பிரசாரம் செய்தான். அவன்முயற்சி வீண் போகவில்லை. வெற்றியையே தேடித்தந்தது அவனுக்கு.

1861-ம்ஆண்டு நாட்டின் ஜனாதிபதியானான். பதவியில் அமர்ந்தவுடன் அடிமைமுறையைச் சட்டபூர்வமாக ஒழித்துக்கட்டினான். தான் கண்ட இளமைக்கனவை நனவாக்கிய அவன் யார் ? அவன்தான் நிறவெறியை எதிர்த்துப் போரிட்டு, அதனால்வந்த உள்நாட்டுப்போரையும் சமாளித்து வெற்றிக்கொடி நாட்டி வீரனாய்மறைந்த பெரியார் — அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன்தான்.

விஞ்ஞானஆசிரியர்—டேய் வில்லி ! எலக்றிக் போஸ்டுகளால் என்ன உபயோகம் ?

வில்லி — சுண்ணாம்பு தடவுவதற்கு ரொம்ப உபயோகமாகுது சார் !

## பதினான்கு லட்சம்

அர்ச். தோமினிக்சபையைச்சேர்ந்த முத்திப்பேறுபெற்ற ஜான்மாஸியாஸ் என்பவர் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களின்பேரில் அதிக பக்தியுள்ளவர். அவர்கள்வேதனை குறையும்படி அவர் அநேகசமயங்களில் இரவெல்லாம் தேவமாதா சுரூபத்தண்டை முழந்தாளில் இருந்து விசேஷவிதமாய்ச் செபித்து வருவார். அநேகசமயங்களில் அவ்வாத்துமாக்கள் தம்மைக்காண்பித்து, அவர்கள்படும் வேதனையை எடுத்துச்சொல்லும். ஆதலால், இவர் ஒருசந்தி உபவாசம் ஆகிய நற்கிருத்தியங்களைச் செய்துவந்தார். அதனால், மோட்சகரையேறும் ஆத்துமாக்கள் தம்மை அவருக்குக்காண்பித்துநன்றிகூறிஏகும். இப்படியாக இவர்தமது நற்கிருத்தியங்களை இரட்டிப்பாக்கி, ஊக்கத்துடன் செய்துவந்தார். ஒருநாள் சிரேஷ்டரின்கீழ்ப்படிதலின்பேரில் எத்தனை ஆத்துமாக்களை மோட்சகரையேற்றினீர் எனக் கேட்க, அதற்கு இவர் பதினான்கு லட்சம் என்றார். இவர் மரித்தவுடன் இவர் உதவியால் மோட்சகரையேறிய ஆத்துமாக்கள் இவரைப்புடைசூழ்ந்து மோட்சத்துக்கு அழைத்துச் சென்றனர்.

ஆதலால் நாமும் உத்தரிக்கிறஸ்தலத்து ஆத்துமாக்களின்பேரில் அதிக பக்திவைத்து நம்மாலியன்ற நற்கிருத்தியங்களைச்செய்து நாம் மரிக்கும்தருவாயில் நமக்கு உதவி புரிய மன்றாடுவோமாக.

றெக்ஸ் இராசையாப்பிள்ளை



உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுக்கக்கூடிய முதற்தரமானசெபம் பூசைப்பலியே. ஆம், பூசைப்பலியைவிடச் சிறந்தசெபந்தான் யாது? மேலேயுள்ள படத்தைப்பாருங்கள். திவ்வியபூசைப்பலி நிறைவேறுகின்றது. எத்தனை ஆத்துமாக்கள் மோட்சகரை சேருகின்றன !

## நீங்கள் ?

காலைக்குளிரைப் பாராமல் சின்னமலரும் மேரிஇராணியும் வாரத்தில் மூன்றுமுறை பூசைப்பலி ஒப்புக்கொடுக்கிறார்கள்.........நீங்கள் ?

* * *

தவராசாவும் அன்ரனும் மாலையில் விளையாட்டை நேரகாலத்துடன் முடித்துவிட்டு, தத்தம் வீடுகளிலே செபமாலைஓதி ஆத்துமாக்களுக்காக ஒப்புக்கொடுக்கிறார்கள்... நீங்கள் ?

* * *

இம்மனுவேலும் யூலியனும் பள்ளிக்கூடத்தில் மனிச்சத்தங்கேட்கும்பொழுது ஆத்துமாக்களுக்காகச் சிறுசெபஞ்சொல்லி வருவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள் ...நீங்கள் ?

* * *

சாந்தினியும் சரோருகமும் தங்களுக்குக் கைச்செலவிற்குக் கிடைக்கும் பணத்தில் மிச்சம்பிடித்து யாவராலும் கைவிடப்பட்ட ஆத்துமாக்களுக்காகப் பூசைசெய்விக்க விருக்கிறார்கள்......நீங்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

**பாரமரிப்புத் தத்துவ இல. 101 C**

சிறுபிள்ளைகள்

1. சூசைதாசன் ஞானப்பிரகாசம்.
2. மரியதாசன் ஞானப்பிரகாசம்

ஆகிய இவர்களின் ஆதனப்பராமரிப்புத் தத்துவவிஷயத்தில்

கரையூர்

ஞானப்பிரகாசம் கைம்பெண் இளமென்ரா — பராமரிப்புத் தத்துவகாரி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 101 C இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1957-ம்ஆண்டு மார்கழிமாதம் 14-ந்திகதி சனிக்கிழமை பிற்பகல்4மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

யாழ்ப்பாணம் கரையூர்இறை "சிதம்பரநாதன்வளவு." ப. நி. இ. 1 குழி $1\frac{1}{2}$-யும் மண்வீடும், குசினியும், கிணறும், தென்னம்பிள்ளைகளும். எல்லை: கிழக்கு — அகஸ்தீன் பெண் மரியப்பிள்ளையின் ஆதனம். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — ரட்டினம்மா சிங்கராயருக்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு — சலமன் பெண் அஸ்தோறிக்கும், இன்னுமொருவருக்கும் உரியஆதனம். யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 5277-ம்இலக்க பிரிவிடுதல் வழக்கின் கடைசித் தீர்வையுடன் உலாந்தாமேஸ்தர் ஜே. மனுவல்என்பவரால் விஸ்தரிக்கப்பட்ட 12-1-50 திகதியைக்கொண்ட 174Aஎன்னும் இலக்கபிளானில் 1என்னும் இலக்கத்தால் சுட்டப்பட்டதுண்டு. பதிவுஇலக்கம் D $\frac{185}{135}$. இதடங்கலில் சொரியலாய் அரைவாசி.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 5-11-57

---

## விளம்பரம்

**இல. M. B. 1156**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

உடுவில்

தம்பு சரவணமுத்து — வழக்காளி.

எதிராக

மானிப்பாய்

1. தில்லையன் கந்தையாவும்,
2. பெண் அன்னம்மாவும் — எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1156-ம்இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக்காணிகள் 1957-ம்ஆண்டு மார்கழிமாதம் 14-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5,733-33-உம், இன்னும்ரூபா 5,000-த்திற்கு 13-8-56 தொடக்கம், 31-10-56 வரையும் 8%வட்டியும், அதன்பின் கூட்டுத்தொகைக்கு 5%வட்டியும், செலவு 283ரூபா 90சதமும். இதில் 883ரூபா 33சதம் இறுபட்டாயிற்று.

### காணிகள் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி, உடுவில் கோவிற்பற்று உடுவில்இறை "வழுக்கற்புலம்." ப. நி. இ. 5. இக்காணியிலும், அதை அடுத்திருக்கும் கிழக்குக்காணியிலும் இருக்கும் கிணற்றில் பங்கும். எல்லை: கிழக்கு — மருதன் தில்லையனுக்கும், பெண் கதிராசிக்கும், நாகன் கணபதி பெண் நாகியின் உரிமைக்காரருக்கும் உரியஆதனங்கள். வடக்கு — மருதன் தில்லையனுக்கும் பெண் கதிராசிக்கும் உரியஆதனம். மேற்கு — சின்னன் கந்தையாவின் ஆதனம். தெற்கு — ஒழுங்கை. இதடங்கலும்.

2. ஷ உடுவில்இறை "அத்தாய்" நி. ப. 5-உம், கிணறும். எல்லை: கிழக்கு — வாய்க்கால். வடக்கு — ஒழுங்கை. மேற்கு — வயிரவன் கிட்டினனின் ஆதனம். தெற்கு — சின்னவன் ஐயனின் ஆதனம். இதடங்கலும், இதற்குரியவைகளும். மேற்கெல்லைக்காணிக்குரிய இக்காணியில் இருக்குங்கிணற்றில் தண்ணீர் இறைக்கும்நாளில் காலைஇறைப்பும், தார்வை.வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்,இன்னும் குறித்தகிணற்றில் மறுகாணிகளுக்குரிய தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும் புறநீங்கலாகவும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 5-11-57

---

# புற்று நோய்

உடம்பில் வெவ்வேறுகடமைகள் புரியும் கோடிக்கணக்கான உயிரணுக்கள்உண்டு. உதாரணமாக, சிவப்பு இரத்தஅணுக்கள் பிராணவாயுவைக் கொண்டுள்ளன. ஈரல் அணுக்கள் உடலுக்குவேண்டிய சக்தியைச் சேர்த்துவைக்கின்றன. எலும்பு அணுக்கள் உடம்புக்கு ஆதாரமாயுள்ளன. எல்லாஉயிரணுக்களும் ஒரு குறித்தமுறையில் இடைவிடாது பிரிவதும், பெருகுவதுமாயிருக்கின்றன.

ஆனால், சிலவேளைகளில் ஏதோ அறியாத காரணத்தினால் ஒருசில அணுக்கள் மட்டுக்குமிஞ்சிப்பெருக, அதனால் உடம்பில் ஒருசதைவளர்ச்சி அல்லது கட்டிஏற்படுகிறது. இது காலகதியில் பெருத்துச் சுகமுள்ள உயிரணுக்களை அழித்து ஈற்றில் நோயாளியையும் கொல்லுகிறது. இது புற்றுநோய் எனப்படும். இதைப் பிளவைநோய்என்றும் கூறுவர்.

### தொற்றுநோய் அன்று

புற்றுநோய் தொற்றுநோயன்று. அது பரவணிநோயுமன்று. ஆனால், சிலகுடும்பங்களில் இந்நோய் ஏற்படக்கூடியதன்மை அதிகமாகக்காணப்படுகிறது. புற்றுநோயின்காரணங்களை இன்னும்முற்றாய் அறியவாராதபொழுதிலும், பயனுள்ளவிஷயங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புற்றுநோய் பெரும்பாலும் 30–40 வயதுக்குப்பின் தோன்றும். பலவேளைகளிலும் ஓர்இடத்தில் நெடுங்காலமாக இருந்துவரும் அழற்சியானது உயிரணுக்களை மட்டின்றி வளர்க்கப் புற்றுநோய் தோன்றுகிறது. உதாரணமாக, இலங்கையில் புகையிலை, சுண்ணும்பு போன்றன உண்டாக்கும் அழற்சிகாரணமாக அதிகமாகவெற்றிலை போடுவோருக்கு நாக்கில்அல்லது சொக்கில் புற்றுநோய் தோன்றுகிறது. அதேவிதம் கருக்குள்ள அல்லது பழுதுள்ள பல்லினால் அல்லது நன்குபொருந்தாத பல் தகட்டினால் உண்டாகும் அழற்சி புற்றுநோயைவருவிக்கும். புற்றுநோய் உடம்பின்எப்பாகத்திலும் உண்டாகலாம். சிறுவரில் ஒருவகைப் புற்றுநோய் காணப்படும். உதாரணமாக, எலும்பிலும் தசைநாரிலும், இழையத்திலும் காணப்படும்.

### முதல்அறிகுறிகள்

1. வாய், நாக்கு, சொக்கு, உதடு இவைகளில் உண்டாகும்புண் இரண்டு மூன்றுகிழமைகளில் மாறுமை.
2. விழுங்குவதில் வில்லங்கம்.
3. சாதாரணமருந்துக்கு மாறுத வயிற்றுமந்தம்.
4. மலங்கழியும்பழக்கத்தில் காரணமின்றி மாற்றம்ஏற்படுவது.
5. மலக்குடலிலிருந்து ஒழுங்கில்லாத இரத்தோட்டம் அல்லது சீதமலம்கழிவது.
6. பெண்களுக்கு ஒழுங்கில்லாத இரத்தோட்டம் அல்லது வழக்கமற்ற முறையில் ஊனீர்வடிவது.
7. மார்பில் கட்டிஉண்டாதல், தோலில் குழிவிழுதல்.
8. காரணமில்லாத இருமல், நீண்டகாலக் குரலடைப்பு.
9. படிப்படியாக நிறைகுறைதல்.
10. உடம்பிலுள்ள காயின்அல்லது மச்சத்தின்பருப்பம் அல்லது நிறம் மாறுதல்.

இந்தஅறிகுறிகள் காணப்படுமாயின் உடனேவைத்தியரின் ஆலோசனையைப் பெறவேண்டும். முதலில் நோ உண்டாவதில்லை. 40வயது வந்த பின்னர் வைத்தியரிடம்சென்று பூரணபரிசோதனை செய்வித்தால் புற்றுநோய்போன்ற நோய்கள்வராது தடைசெய்யலாம்.

### புற்றுநோய் குணமாகுமா ?

ஆம், இலங்கையில் 50சதவீதத்துக்குமேற்பட்டது வாயில்உண்டாகும் புற்றுநோயே. இதை முன்னரே அறிந்து அநேகமாக மாற்றிக்கொள்ளலாம். மார்பில்ஏற்படும் புற்றுநோயையும் பெரும்பாலும் மாற்றிக்கொள்ளலாம். ஏனையஇடங்களில் ஏற்படும் புற்றுநோய்களின் மேற்கண்டஅறிகுறிகள் தென்பட்டால் கூடியவிரைவில் வைத்தியரிடம்காட்டினால் குணமடையலாம்.

நோயைஅறிந்துகொள்வதில் ஏற்படும்தாமதமே மரணத்தைவிளைவிக்கிறது. ஆதலால் சந்தேகத்திற்குரிய அறிகுறிகள் தோன்றுங்கால் காலம் தாழ்த்தாது வைத்தியரின் உதவியைத் தேடிக்கொள்ள வேண்டும்.

### சிகிச்சைகள்

மூன்று முக்கியமுறைகள்உண்டு: சத்திரவைத்தியம், ஊடுருவுகதிர்கள், றேடியம்என்பன. நோய்முற்றியபின்னரும் தற்கால சிகிச்சைமுறைகளால் வலியையும், வருத்தத்தையும் பெரிதும்குறைத்துக்கொள்ளலாம். ஆயுள்வேதவைத்தியரெனத் தம்மை அழைத்துக்கொள்ளும் ஒருசிலர் விளம்பரம் செய்யும் பத்தியமுறைகளும், குளிகைகளும், குழம்புவகைகளும், பூச்சுமருந்துகளும் புற்றுநோயைமாற்றமாட்டா. முன்கூறிய பிரகாரம் சரியானசிகிச்சை செய்வியாது தாமதிப்பதே பெருங்கேடு.

### வெற்றிலை போடுவோர்

1. வெற்றிலையை மட்டாகப் போடவும்.
2. புகையிலையையும், சுண்ணும்பையும் தவிர்த்துக்கொள்ளவும்.
3. பிளவுவாயிலிருக்க நித்திரைக்குச் செல்லவேண்டாம்.
4. பிளவுமுடிந்தபின் வாயைக் கழுவிக்கொள்ளவும்.
5. வாயில் புண் ஏற்பட்டால் வைத்தியரிடம்செல்லவும்.
6. கருக்குள்ள அல்லது பழுதுள்ளபற்களுக்குத் தகுந்தசிகிச்சை பெறவும்.

(புற்றுநோய்ச் சங்கவெளியீடு)

---


## TENDER NOTICE

**Jaffna Municipal Council**
**Lease Of "Markets"—1958**

The closing date for the receipt of Tenders is her by extended up to 4-30 p.m. on Monday the 11th November, 1957.

**Hudson Selvarajah.**
Actg. Municipal Commissioner.
S-P.

Municipal Office,
Jaffna. 1-11-57


---

✻ உலகில் மிகப்பெருந்தொகையாகப் பால்அருந்தும் நாட்டினர் யார்?

ஐஸ்லாந்துதீவினரே. இவர்கள் வருடம்ஒன்றுக்குச் சராசரிவீதமாக ஒவ்வொருவருமே 400 குவாட்பால் அருந்துகின்றனர்.

---

## மரணப் படுக்கையிலே

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பலன். மறுவருடம் பிறக்கிறுன் மகன் குமார். அப்பொழுதும் மாறவில்லை அவன்.

காலம் தன்கடமையைச் செய்யத் தொடங்குகிறது. வினைவிதைத்தவன் வினையறுக்கிறுன். புதுப்புது வியாதிகள் புகுகின்றன அவனது பூதஉடலில், எல்லாவற்றிற்கும் மேலாக அவனது வாழ்க்கைக்கே உலைவைக்க அவனைப் பீடிக்கின்றது சயரோகம். சயரோக விடுதியில் அனுமதிக்கப்பட்ட அவன் எட்டுமாதங்களில் கைதேர்ந்த வைத்தியர்களால் கைவிடப்படுகிறுன். நேற்று அந்தமருத்துவர் பக்கத்துஅறையில் அவன் தந்தையிடம் சொல்லிக்கொண்டிருந்தது அவனுடையகாதில் மறுபடியும் ரீங்காரம்செய்தது. "இனி நம்பிக்கையில்லை. இரண்டு சுவாசப்பைகளும் முழுதும் அரிக்கப்பட்டுவிட்டன. இன்னும இரண்டுநாட்கள் இருந்தாலே அதிகம்."

மாநிலத்தின் மறுசுழற்சி முடிந்துவிட்டது. இப்பொழுது ஆனந்தத்திற்கு வயது இருபத்தாறு. அவனது தீயசெயல்கள் அவன்கண்முன் பயங்கர நர்த்தனம் புரிந்தன. யானை தன்தலையிலேயே மணலை வாரிப்போட்டுக்கொள்வதைப்போல், சஞ்சோன் கட்டிடத்தைத் தன்தலைமீது இழுத்துப் போட்டுக்கொண்டதுபோல் ஆனந்தம் தன்னைத்தானே அழித்துக்கொண்டான். அதன்பயனுகக் குழிவிழுந்த கண்களுடனும், வற்றியஉடலுடனும் கிடந்தான் மரணப்படுக்கையில். அழிவின்ஏணியிலே ஆனந்தமாகப் படிப்படியாகஏறின அவன் உச்சியை அடைந்தபின்தான் கீழேபார்த்தான். அவன் அடியில்கண்டது ஆழ்ந்தநரகம். மேலே வெட்டவெளி. இனி அவன்உய்ய வழியே இல்லையா? ஆனந்தத்தின் கண்களினின்றும் கண்ணீர்வழிந்தது. மறைந்த அவன்மனச்சாட்சி மறுபடியும் புத்துயிர்பெற்று, ஆயிரமாயிரம் ஈட்டிகளாக அவனது உள்ளத்தைப் பிளந்து திடீரென்று அவன் தலைக்கு மேலுள்ள அந்த வெட்டவெளியிலே தெரிந்தது ஒருவெண்மையான கரம். "ஏன் வழியில்லை? உன்பாவங்களுக்காக உத்தமமனஸ்தாபப்பட்டுப் பாவசங்கீர்த்தனஞ்செய்து அவஸ்தைபெற்றுக்கொள். அந்தக்கரம் உன்னை மேலே தூக்கிவிடும்" என ஒலித்தது அவனது அந்தராத்மா. தன்வாழ்விலே ஒருநாளும் மனச்சாட்சியை மதியாத அவன் அதற்கு அடிபணிந்தான்.

"அம்மா! சுவாமியாரைக் கூப்பிடுங்கள்" இந்தச்சொற்கள் இன்பத்தேனுகப் பாய்ந்தது அவனது அன்னையின் செவியில். "உனக்கு நல்லமரணமாவது கிடைக்க வேண்டுமென்று நான் தேவதாயைவேண்டி இரவுபகலாகக் கையெடுத்துச் சொல்லிவந்த செபமாலைகள் வீண்போகவில்லையடா" எனக்கூறி ஆனந்தக்கண்ணீர் வடித்தாள் அவள். சுவாமியார் வந்தார். ஆனந்தம் நல்லபாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மைஉட்கொண்டு, அவஸ்தைப்பூசுதலும் பெற்றுக்கொண்டான். அவனது முகத்திலே அலாதியான ஓர்வித அமைதி பிறந்தது. தன்னை மன்னிக்கும்படி ஒவ்வொருவரையும் கண்ணீரும் கம்பலையுமாய்க் கேட்டுக்கொண்டான். அவனது நாடி மெதுவாகத் தளர்ந்தது. சுவாசம் கொஞ்சங்கொஞ்சமாக நின்றது. கண்கள் மெதுவாக மூடின. மறுவிநாடி அவன் ஆவிபிரிந்துவிட்டது. உலகத்தின் சுழற்சியும்நின்றுவிட்டது. ஆம்! அவனைப்பொறுத்தவரை உலகம் சுழலாமல் நிலையாக நின்றுதான்விட்டது.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday. November 7-1957.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org